KUMARAVEL MUMMANI KOVAI.

INTRODUCTION.

THE expression Mummani Kovai—மும்மணிக்கோவை—is composed of three words *viz*, மூன்று + மணி + கோவை = three + gem + garland. In other words, it is a garland of three gems. The gems referred to here are the three different kinds of metre employed in this poem *viz*., Acheriyapa (ஆசிரியப்பா), Venba (வெண்பா), and Kalithurai (கலித்துறை). The term garland has been appropriately used inasmuch as the different kinds of verses are so connected with one another, as to form one continuous string. This form of versification, bears the particular name of Anthathy (அந்தாதி) in Tamil prosody, which means end is the beginning.

2. Though the work is coupled with the name of Kumaravel (குமாரவேள்)—the Presiding Deity over all the several towers and the five theatres (அம்பலம்) of the most ancient and celebrated of the Dravidian Shrines in Southern India, Chidambaram—it is more a philosophic discourse on the connection between God and Soul. The chief hero is the Dravidian God Muruga or Kumaravel—the young lover—and the heroine is the mind, metamorphosed into a lovely damsel, seeking the hand of Divine Muruga. Besides these there is one more character, who is the maid of honor attending on the heroine.

ஆசிரியர் துதி.

விராய சீர்த்திசால் பரசிவ முதல்வனே விழைவாற்
றராத லத்துயர் வுழுத்திய தெய்வதத் தமிழை
நிராம யத்துணர் வுறவுளங் கொளீஇத்தலை நிறுக்கும்
இராம லிங்கவெம் மடிகளி னடிகளைத் தொடுப்பாம்.

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்

குமரவேள் மும்மணிக் கோவை

சிதம்பரம்

ஸ்ரீசபாநாயகர் திருவனந்தல் காலசந்திக்கட்டளை

வெ. தில்லைநாயக முதலியார்

செய்தது.

இது

சீர்காழி L. M. C. ஹைஸ்கூல் பண்டிதர்

இராஜாப் பிள்ளை இயற்றிய

அருங்குறிப்புடன்,

திருநாரையூர்

தேவஸ்தான தருமகர்த்தா

முத்துக்குமாரப் பிள்ளையால்

[illegible]

[illegible]

[illegible]

3. The poem before us is not of that class we come across in these prosaic days. The style employed by the poet is consonant with the metre adopted by him. The lofty spirit that pervades it, and the vigorous and felicitous diction in which it is clothed are all his own. It is said by an eminent authority* that the "most striking characteristics "of the poetry of Milton is the extreme remoteness of "the association by means of which it acts on the reader. "Its effect is produced not so much by what it expresses "as by what it suggests." This may well be said of the present work. In adopting himself to this ideal standard, the poet has not followed the beaten track, traced by the present day writers. For they write verses and not poetry. They do not "employ words in such a manner, "as to produce on the imagination, the art of doing by words, "what the painter does by colors." The dignified position attained by our talented author is seldom reached by the crowd. Again it is the practice of present day writers to use such trite and common place ideas, and clothe them, in equally undignified language, as to afford no room for sublime thoughts, and to allow no opportunity to the reader to make out a poem for himself from any one of them. It is also their inexcusable sin, to indulge themselves in the free use of foreign words and strange idioms, without at least passing them through the established crucibles, as if the Tamil language were so impotent as to be unable to find adequate words and expressions of its own or so bankrupt in ideas, as to express modern thought and cope with the advanced state of civilization. One's regret becomes intensified when it is remembered that such a tendency is encouraged by educationists who are Indians in every sense of the term. All this is

* Lord Macaulay.

due to the want of acquaintance with the best Tamil literature and its noble traditions. But our poet has kept his ideals steadily before him, and thus revolutionised the existing state of things. In doing so he has taken us back to the period of the third sangam—the augustine period of the Tamil literature-about the earlier centuries of the Christian era. Any one who peruses the verses in this work, would mistake them for those of that period perhaps for some leaves out of the Silappathikaram or the Manimekalai. Here I should warn the reader against supposing, that the Mummanikovai dedicated to the central figure at Chidambaram is the same as the present work.

4. The poem opens with an invocation to the Deity as in the case of all Indian works. Here the poet seeks the intervention of the Pillayar or Karpakavinayakar at the entrance to the temple at Chidambaram to vouchsafe success. Next the work is divided into thirty arguments. The first argument is an apostrophe to the mind calling upon it, to get on as best as it could, making itself sure that its knowledge, desire, and actions are those of its Lord. In the next two stanzas the Grace of God is sought both directly by the heroine and through the medium of her maid. In the fourth argument the heroine suggests the surrender of the mind, speech and body, as hostages for the favour she seeks, and perhaps for the due performance on her part of her duty. In the fifth argument she "fondly asks" why He who was able to bestow the celestial world on the Gods (Devas) should be contented with a humble place as the forest of Tillai (*Eacoecaria agallacha*). In the following argument, the heroine insists upon the necessity of Grace. While seeking His protection, in the seventh argument, the idea of one Supreme God has been vividly brought before the mind of the reader.

Next the inconsolable state of mind is depicted, and it is found fault for not adoring Him. While discussing what is Grace in the next one hundred lines, the problems of this life have been discussed with consummate skill. The state of the mind fermented as it was, had necessarily to be cooled down and with that object, the maid announced that the winter had set in. In the thirteenth argument, while the heroine reiterates that it is impossible for her to do without Grace, she discusses the important tenets of the Saiva Siddhantha, prominently amongst them, the intimate relation between God and soul after it clears itself of all its impurities which are the foundation of the endless births and deaths in this world. In the next argument there is an address to the mortals in this world, pointing out the condition in which they are and what troubles are brought about by their actions—good and bad. The trite ground of the transitory nature of the pleasures of this world is next treaded on, followed by a message through the mind to the hero, to represent to Him that He was the origin of all things and that she adored Him in order to obtain beatitude. In the twentieth argument the heroine desires that she should wed him, and in that state of mind addresssd her plaint to the antelope and the bee, while her maid addressed the sea. The purport of the next argument is that Grace would be granted wherever there is love. The twenty fourth argument is supposed to have been addressed to the swan, but in fact it was meant to explain an important stage of yoga when God and Soul are identified with one another. In the following two arguments the maid and the heroine address the Lord and in the twenty-seventh they arrive at the conclusion that it is not an easy matter to obtain Grace. In the next the heroine repeats her desires to the Lord, followed by the consolation offered by the maid. Finally the maid

tells the heroine in unequivocal terms, that is the duty of man to seek the Grace of God and it is left to His pleasure to grant it or withhold it. The concluding portion of the poem dedicates the work to Kumaravel (குமரவேள்) as He and He alone is fit to own it.

5. In concluding this introductory notice, I should not omit to say a word or two of the author of this beautiful little poem—Mr.V.ThillainayagaMudaliar. He comes of a prominent family in the District, which early took to the art of agriculture, and commerce on a grand scale, in silk and yarn. His family is better known in connection with the great shrine at Chidambaram. In pursuance of the time honoured practice, adoration is paid to the Deity six times a day commencing at 4. in the morning and closing at about 10. in the evening. The very first one which is supposd to be a very important rite is performed at the cost of the family of the poet, which was founded by one Vellapirantha Mudaliar (வெல்லப் பிறந்த முதலியார்) at some time beyond the memory of man. Owing to the disturbances caused by Hyder and his redoubtable son, the family records have been lost in the confusion created by them, but there is no doubt that Mr. Cundasawmy Mudaliar the father of the poet was a lineal descendant of that great man who founded both the family and the religious trust. The whole family is a gifted one as all its members are Tamil schol ars. Our author has rummaged the whole range of Tamil Literature both ancient and modern and he has very few equals. He very appropriately holds the office of Vice-President of the Tamil Sangam at Chidambaram and is an Honorary literary Associate with the Tamil Lexicon Committee. Again as a matter of pleasure and duty to his country, he daily devotes an hour or two to the Pandit class attached

o the Saiva Prakasa Vidya Salay established. at the place by he great religious Revivalist and Savant Arumuga Navalar.

6. In commending this valuable contribution to the iterature of the land of his birth, to the Public, it is my ervent prayer that the author young as he is should continue :o dovote his spare moments for improvement of his mother :ongue, and add more to its literature both in verse and prose in the style adopted in this poem, and that the public should encourage him by prescribing the present volume as a snbject of study in the higher classes of High schools and colleges, and that the university should be pleased to perform the same office by making it *a text for the M. A, and other xaminations*, as it deserves to be treated as such.

SIVASILEM
15th December 1913.

T. PONNAMBALAM PILLAY
M. R. A. S.
Retired Excise Commissioner of Travancore.

ஓம்.

சிதம்பரம்

ப்ரஹ்மஸ்ரீ

ஆ. நடராஜமூர்த்தி தீக்ஷிதரவர்கள்

இயற்றியது.

श्रीमत्स्कन्द कथारसामृतझरी संसिक्त पद्यांबुज
क्रीडासक्त मनोद्विजावलि सुहृच्छ्री द्राविडांकस्यवु भाक्
कुर्वन् चारु सुपद्य हृद्य विलसत् रत्नत्रय प्रबंधं
विद्वच्छ्लाघित तिल्लैनायक घनो ज्ञानांबरे शोभते ॥

சிதம்பரம்

செந்தமிழ்ச்சங்க வித்துவான்

ப்ரஹ்மஸ்ரீ மா. கோபாலசுவாமி தீக்ஷிதரவர்கள்

இயற்றியது.

எவ்வுலகுந் தொழுதகுசிற் றம்பலம்வாழ்
முருகவேட் கியலோ ரைந்தின்
றிவ்வியநான் மொழிபயின்மும் மணிக்கோவை,
யிருமையுறச் சேர்த்தி னானை
லெவ்வமருந் தனபாலன் குணசீல
னனுகூல னெவர்க்கு மென்றுஞ்
செவ்விதிற்றோர் பலநூல னெழிற்றில்லை.
நாயகப்பேர் திகழ்வல் லோனே.

சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய

மஹாமஹோபாத்தியாயர்

ப்ரஹ்மஸ்ரீ வே. சாமிநாதைய ரவர்கள்

இயற்றியது.

மாவையுறுஞ் சீர்த்தில்லை வாழ்குகன்மேன் மும்மணிக்
கோவையொன்று செந்தமிழிற் கூறினனாற்—பாவைமிக
ஆயகத்தோர் நாப்பணுரை யாடுதிற லோன்றில்லை
நாயகப்பேர்ச் செம்மல் நயந்து.

திருக்கோவலூர் ஆதீனம்

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளவர்கள்

இயற்றியது.

பமர மடுப்பப் பகுகடபப மாலைக்
குமரவேள் மும்மணிக் கோவை—தமரமிகு
தில்லை வதிதில்லை நாயகமால் செப்பினான்
மல்லலுற வாழியவிம் மண்.

முகவுரை.

பூமியின்கண்ணுள்ள அறிஞர்பலரும் தாம்தாம் குறைவில்லாத இன்பநுகர்ச்சியை எய்தவேண்டுமென்று போதிய சாதனங்களைக் கைக்கொண்டு அவ்வின்பந் தரூஉம் பெரியாரயினுர்க்கு அருள்பெருகுமாறு அன்புசெய் தொழுகுகின்றார். பெரும்பான்மையும் உலகியற்கையில் வாழும் மக்களெல்லாம் சிற்றின்பப்பொருளாகிய மண்ணும் பெண்ணும் பொன்னும் பிறவுமே வேண்டி முயன்று அவற்றை உடையவர்பால் அன்பு செய்துபெற்று அவைகாரணமாக உண்டாம் இன்பிற்றிளைத்து மகிழுகின்றனர். இவை காலத்தானும் இடத்தானும் வரைந்துகொண்டனவாய்ச் சிறுகிய நேரத்துள் அழிதன்மாலையவாய்ப் பின்னர்த் துன்பந்தருவனவா யிருத்தல்பற்றிச் சிற்றின்பமென்று கூறப்படுகின்றன.

இனி, யாண்டும் நிலைபேறுள்ளதாய் எனைத்தானும் தடைபடாத அறிவாய் வரையறையில்லாத பேரின்பமாய் உலகியற் பொருளெல்லாந் தன்னுளொருங்கி மடங்கத் தான் அவையிற்றி னூடுருவி நிற்பதோடு மற்றவற்றின் மேம்பட்ட வியாபகமாய் நிற்கும் முழுமுதற்கடவுளை நினைந்து நினைந்து அன்புமீதூர வாழ்த்துதலே நாம் வரையறையில்லாத பேரின்பநுகர்தற்குச் சாதனமாமென்க.

எனவே பேரின்ப வேட்கையுடையோர் யாரும் பேரின்பமயமாய பரம்பொருளை நினைந்து வாழ்த்திவணங்குதல் இன்றியமையாமை தெளியப்படும்.

எல்லாவின்பமுந் தன்னுளடக்கிக்கொண்டு விரிந்த பேரின்பமே வேண்டத்தக்கதென்றுணர்ந்த எமது ஆசிரியரவர்கள் தாம் நேர்ந்துகொண்டவாறே பாவினும் பாவினத்தினுஞ் சிறந்த ஆசிரியப்பா வெண்பா, கலித்துறை என்னும் முத்திறப்பாட்டால் முதற்பாட்டின் முடிவு அடுத்தபாட்டின் முதலாகத் தொடுக்கும் அந்தாதித் தொடையோடு பொருளமைதிபெற்று அழகுவாய்ப்ப முப்பதுசெய்யுளின் மண்டலித்துமுடியும் மும்மணிக்கோவை யென்னும் இந்நூலைச் சாலிவாகன

சகம் ௧அ௬௦ ற் செல்லாநின்ற கீலகவாண்டு மகாரவி குருவாரம் பூசநா ளன்றுதொடங்கிச் சின்னுளின் முற்றுவித்துப் பரம்பொருளாகிய குமர வேளின் விரைமலர்புரையுந் திருவடிக்கு வாழ்த்தி வணங்கிச் சூட்டினர்.

ஆகவே இந்நூல் தேவபாடாண்டிணையிற் கந்தழி வாழ்த்தாவ தும் "வழக்கொடு சிவணிய வகைமையான" என்ற தொல்காப்பிய ராணையி னடங்கும் பிரபந்தங்களுளொன்ருய் இழுமென் மொழியாற் புதுவதொன்றைப் புனைந்துகூறிய சொற்றொடர்நிலைச் செய்யுளாத லின் விருத்து என்னும் வனப்புவாய்ந்திருத்தலும் அறிக.

மற்றிதனை ஆராயுங்கால் இதனுட் கூறியன பலர்க்கும் பயன்றாக் கூடியவாதலை நன்குதெரிந்த எமதாப்த சகோதரரும், திருநாரையூர் தேவஸ்தான தருமகர்த்தரும், இந்நூலாசிரியரின் மாணுக்கருமாகிய ஸ்ரீமான் முத்துக்குமாரப் பிள்ளையவர்கள் அச்சிடவேண்டுமென்று கரு திக் குறிப்புரை எழுதித் தருமாறு பெரிதும் வற்புறுத்தினராதலானும், எமது சங்கத்தவரும் அங்ஙனமே செய்கவென ஊக்கியதானும் மிகச் சுருக்கமாக அருங்குறிப்பு எழுதி இந்நூலுடன் சேர்க்கப்பட்டது.

இதனை அச்சிட்டுபகரித்த முத்துக்குமாரப் பிள்ளையவர்கள் அன் பும் பரோபகாரகுணமும் மிகவியக்கத் தக்கன.

இந்நூல் செந்தமிழ்ச் சங்கத்தில் திவான்பஹதூர் ஸ்ரீமான் S. Rm. M. இராமசாமிச் செட்டியாரவர்கள் தலைமை வகிப்ப ஸ்ரீ தில்லைவாழந்தணர் முதலிய பெரியோர் முன்னிலையில் படித்து வெளியிடப்பட்டது.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்."

சிதம்பரம்
ஆனந்தஹு மகாரவி.

இங்ஙனம்
செந்தமிழ்ச்சங்கம்
காரியதரிசி,
C. S. இராஜாப் பிள்ளை.
(*Pandit., L. M. C.; High School., Shiyali.*)

ஓம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம்

குமரவேள்

மும்மணிக்கோவை.

விநாயகர்துதி.

குலவியசீ ரெல்லாங் குறிக்கொண் டுவப்பா
னிலவியபொன் மன்றுடைய நித்தன்—பொலியவருள்
கற்பகத்தை நண்ணுணர்விற் காணன்பு நீர்மடுத்துப்
பொற்புறுப்பா நெஞ்சப் புலம்.

நூல்.

நெஞ்சொடுகிளத்தல்.

பூமண மிகுந்த தேமணங் கான்று
நறைத்துளி பிலிற்றிய நலனார் கமலக்
காமரு தவிசிற் காண்டக விருந்து
முற்பயன் பிழையா தப்பயன் கொண்மா
ராருயிர்த் தொகுதிக் கீரிரு பிறப்பி
னெழுதிறம் வகுத்தவற் றிடமுறை நிறீஇய:
மன்னிருஞ் சிறப்பின் மறைமுதற் கிழவன்
றேங்குநீர் பெருக மடையுடைந் தாங்கு
வார்தரு கரடத் தீரிரு கோட்டுக்

கறையடிக் களிமிகு களிற்றுக் கோமகன்
முதற்படு தெய்வ முதன்மை யோருந்
தவலற் கரிய கவலொன் றுற்றுழி
யிணைதீர் சிறப்பி னிடன்வரைத் துள்கிக்
கடனிலம் போந்து கடவுட் பராஅ
யஃதொரீ நன்கி னூக்கம் பெறுத
லறிவ ருரைபற்றி யறிந்தா மன்றே
யின்பே நனிபெரி தீவது மேனில
மின்னு நனிபெரி தீவது கீணா
கிரண்டு நனிபெரி தீவது மிவணே
யாகன் மாற்றி னெண்ணுவரம் பறியாத்
தொல்பே ரிருவினை யொருங்குறத் துய்த்துத்
தீர்வான் வேண்டிற் பார்வரு பிறவி
மேவலி னின்ற னேவிறுணைப் பேறு
நன்று பெரிதுடைத் தாமே மன்ற
வளிவழி யியங்கு முளிபுற் போல
நின்வழி யியங்க வென்னையு மீர்த்து
நிலமுதற் பூத மயக்க வுலகிற்
காணுந நிலையென் றெணுறக் குறியா
வெனவெதன தாக விசைத்சவை யற்றை
யுண்டும் புனைந்து முவகை பெருக்கி
மற்றவற் றழிவின் மயக்குற் றிரங்குதி
படரிவை யோடுநிற் கெவனோ தொடர்பிங்
கதாஅன், றிருப்பிற் கடிய மருப்பிற் கொடிய
கார்நிற மேதி யேர்பு வெருவந்
துளங்குலை குலைய வுறுக்கி னமனர்
வருநா ளுறுதுணை சிறிது மின்றே
யலகில வான மலர்தலைப் புவன
மியாவுந் தன்னு ளடங்க மேவிப்
பெரியதிற் பெரிதாய் மிளிரும் பெரியோன்

சிறுமை யெனுஞ்சொன் மறையினி னிற்கச்
சிறியதிற் சிறிதே யாகிய சிறியோ
னருள்கருப் பொறைசுமந் தகம்புறம் வழீஇ
வார்தரு பன்னிரு விழியன் பேர்தரு
குறிபோ யிருந்த திருவளர் குமரன்
குருபர சிவனெனக் கொண்டு தகவி
னிணைஇய வறிஞர் வினைதெறூஉ மண்ண
றறுகண் மறங்கெழு கொடுவரி யொன்றும்
வெஞ்சினப் பேழ்வாய் நஞ்சர வொன்றும்
வீயா நண்பின் மாயிரும் பெருமைப்
பல்புகழ் பழிச்சித் தாபதப் படிவிற்
சிறந்துடன் வாழுந் தில்லை வனமே
யிடனென விருந்த வென்னுயிர்க் கிறைவ
னிணையடிக் கமல முனதகம் பூப்ப
வெதுவெது வறிவுகோட் படினு மெதுவெது
வேண வாவுட் படினு மெதுவெது
முயறலை வந்த செயலுட் படினும்
புலனிலை யாதுங் கலங்காது நிறுத்துபு
வீழ்தரு தயில தாரை போலப்
புனைதரூஉ மன்பிற் றினையும் வழாஅ
தவன்ற னறிவே யவன்ற னிச்சை
யவன்றன் செயலென வமைவு கூர்ந்து
தொடரிடர்க் குழுவைத் துரப்பி மகிழ்மிக்
குயர்தரு வாழ்வி னுய்தியென் றீண்டை
யறைமொழி விஞுஅ யறிவுற் றோர்ந்தே
யீறிலா தமர்ந்த சீர்வரும் பேறு
கைவரப் பெறலாற் களிமதி மெய்ந்நிலை
நுனித்துணா ராதே நுண்மரக் கிளைதா
யுழிதரு குரங்கி னேடி
நிலையுத விலாது நின்றவென் னெஞ்சே. (௧)

அருட்டரவேண்டல்.

ஏக்கற்று நின்றே யிடர்ப்பா டுறுகின்றேன்
றூக்கற்று நின்ற தனிமுதலே—நோக்குநுதற்
கண்ணா னடித்தபதிக் காமுறுவோய் பன்னிரண்டு
கண்ணா வருளுகடைக் கண். (௨.)

தோழியோடுகூறல்.

கண்பெற்றபேறென்றுலகார்பொருளிற்கஞலலன்றி
யெண்பெற்றஞானவுருவானதற்கண்டிடினுருகேற்
குண்பெற்றதீவினைதீர்வுற்றவாழ்வுமுதவுங்கொலோ
மண்பெற்றதில்லையினோராறுமாமுகவண்மணியே. (௩)

கையுறையேலெனக்கட்டுரைகிளத்தல்.

மணியென் காரண விடுகுறி யெணினே
யொருசில வற்றின் வரையாது நிற்கு
மற்றவற் றொன்றென மண்ணுதல் பெறாஅது
விழுமிதிற் சிறந்தன் றெழூகொளி நித்தில
மெய்வளம் பழுத்த கைவள மீகையென்
னுரைத்திறம் புதுக்கி யாங்கே நுரைத்தெழு
சிறுநுண் டுள்ளி வான்முறை செறீஇய
நீணீர்த் தரங்கப் பூணமர் கரத்தா
லம்மணி கையரித் தலகில வாகி
முறைமுறை மிளிர வறைகட லீமே
தற்புரங் தளித்த தலைவற் கெதிராசை
யிற்புரங் தளித்த விந்திரன் பொருட்டே
யிருந்துநனி யிரங்கலுந் திருந்திய வூடலு
மோராற் றியைபெனு முதுதன் பொருட்டே
யுட்புற மாசொரீஇ யொட்ப மிகுத்துப்
புறப்புற மாசொரீஇப் புரிவன நல்கித்
தன்னைச் சிவணத் தன்னை யுறுநர்க்

கரும்பெற லியாவுந் தரூஉத் திறம்பட
வொழுகிய யாறுசெய் வளம்பல கெழுவவித்
தகவயி னளாய வதுதன் பொருட்டே
தகவில வான முற்றுந் தவிரத்
தக்கார்க் கீகை தலைப்பட் டிடினே
கழிசிறந்த விழுப்பொருள்க
ளினிமையினு லெய்திடுமென்
றுரைத்தவுரைத் திறனுலே
கழைவிழையாப் பணைத்தோளா
ரிழைநுழையா விணைமுலையார்
நாணிரம்பும் வாண்மதியத்
துள்வயினே தான்மலர்ந்த
மாமுகத்து நீல்விழியா
ரயல்வெறுத்துக் குயினுக்கு
மஞ்ஞையெனச் செய்ஞ்ஞின்ற
களைகட்டு விளைவொன்றேற
விழைவார்ந்த வுழத்தியர்சூழ்
பைம்புலத்துச் செஞ்சாலி
நென்மணித் திரளைத் தன்மலி நாவா
யிடனறக் கொண்டுண் டியங்குறு காலாற்
றிசைதிசை செலீஇ நசையிசை நிறீஇ
யின்பாற் செழிக்கு மிதுதன் பொருட்டே
என்றுங்கு, நூனுழை புலத்து நுண்பொரு ளியலாற்
பெரியர் யாரும் விரிபுகழ் தெரிக்கு
நெய்தல்புறந் தழீஇய செய்வயன் மருதத்
தரைவளந் தருசிதம் பரமெனும் பதிக்கட்
காண்டல் செல்லா வருவினுங் காணூஉக்
கணித்தல் செல்லா வுருவினுங் கலவித்
திலமுறு நெய்யிற் சிவணிய வுணர்ந்திட
வுறைவிடங் கொண்ட வறுமுகப் பெரும

வுன்னினர் நோதக வன்னணங் கடிந்து
விரும்பின தரூஉம் பெரும்பெய ரியவு
ளேவமர் நோக்கிற் றேவகுஞ் சரிய
மொள்ளிழை கவினிய வள்ளிக் கொடியும்
வாழி யெனப்படர் பாழிப் புயமலை
பத்துட ஞேரிரண் டுடைய வித்தக
புவனி யளந்த கவடுபல போக்கி
மேனிலத் துயரி வான்முகடு போழ்ந்து
பைங்கடல் கிடந்த பராரை மாமுத
லிம்மெனக் கவர்படுத் திருவேறு கூற்றுச்
சேவலு மயிலுமாக் கணித்த தேவிய
லுடம்பிடி யிருந்த வொண்டளிர்க் கரத்த
நூலா னியங்கும் பாவை போல
மல்கி யன்றிச் செல்கலா வினையி
னல்லாந் துயங்கு மவதி கடப்பா
னடைகுநர்ப் புரந்த தடமல ரடியோய்
"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்ப"
மதுவே, மாயிரும் பெருமைப் பாயிர மாக
வாயிர மாயிர மரும்பேர் கிளந்து
சிரமீ மிசையே யிருகை மொட்டித்
தாமெறழுத் துற்ற பேருர் நன்மனு
நலம்பெற நினை இ நிலம்பட வீழ்ந்து
மையல்தீ ரின்பே மன்னிய வேட்கு
மனமொழி மெய்யென வருத்த
கையுறை யேற்றுக் காத்திடு கெனவே. (௪)

உயர்நிலைகூறிஉற்றதுரைத்தல்.

காமாபூ பாலர் கருதிக் குறையிரப்பத்
தாமா முரிமை தலையளித்த—கோமானீ
தில்லவன மேவித் திகழ்ந்தா யிதனுண்மை
நல்வளனென் றோமோ நவில். (௫

துறைநயத்தல்.

நவிதந்தநோக்கிற்குவிதந்தகொங்கைநலத்தினரும்
புவிதந்தவேனைப்பொருள்களுமபோற்றிப்புலந்தருநூற்
கவிதந்தநின்சீர்கணிக்ககில்லேற்கருள்காட்டுகண்டாய்
சவிதந்தபொற்றிருச்சிற்றம்பலம்வளர்சண்முகனே. (௬)

ஓம்படை வேண்டல்.

முகம்பல வாக வகம்புற மொருங்கி
யுலப்பில் கால மொண்பொரு ணோக்கி
யெவரெத் திறத்தா ரவர்க்கத் திறத்தான்
மெய்யுணர் வாய்ப்பச் செய்யருட் குரவனி
னிருவே றியற்கை யிப்பா ரிடக்க
ணெய்துதற் கரிய மெய்ந்நலம் பெறாஉ
நற்பய னென்றுந் தற்பய னெலா
தொருசார் விலங்கி னரிதி னுய்க்கு
மீக்கூர் வைகலை வறிதே போசகுற்
றுண்டு பசிதீர்ந் துழிதரு வேமு
முறைமுறை யாக வறிவுகொளல் வேண்டிச்
சொன்முகப் பிரணவ நின்மொழி யெனாஅப்
பிரிநிலை யில்லாப பிரமமே யெனாஅ
வூக்கிய வறிவி னுலையா முயற்சியின்
மடவோர் செய்தி முடிவுபே றின்றிச்
செலச்செல மெலிந்தற் றொழிகுத வென்ன
வன்னிநாற் றிசையுஞ் சுடர்விரிந் தென்னத்
தோற்றர வாகி மாற்றின்றி நிலைத்துள்
ளொடுங்கியல் பெற்ற வொலிவகைக் கெல்லா
மாசமர் நாதப் பிரமமே யெனாஅப்
பதநிலை கலைக்கெலா முதனிலை யெனாஅத்
தன்னந் தனிமை யின்றி மன்னும்
வரையா மிகுபுகழ் மறையை யருளினை
அதுவே, விழிதுறை மேவத் தொழின்முறை புரிய

வதுதற் பயனை யார்த்து வைக்கு
மாதலிற் றவிர்வ தறுதிபட் டொழியச்
செய்வதும் பயனுஞ் செப்பு நெறியிற்
கரும காண்டமெனக் கவினுமோர் படல
மெச்சமின் றேடிப் பரந்த விச்சை
புணர்வு வயப்பட் டொடுங்கு மாற்றான்
மன்னிய வதனைத் தன்னுட் படுத்துக்
காணும் பொருட்டன்மை கணிக்ககி லாது
வருபொது வறிவு மையமுந் திரிபுந்
தணப்பில் பெயரே தன்மையே குணனே
கிரியையே பொருளே யென்ற முறையின்
வேறுவே றாகப் பேறுதரு முணர்வுங்
கண்கூ டாகுருப் பொருளு மெண்ணி
லொளிவரு மருவப் பொருளுந் தெளிவுற்
றிவற்றியன் முழுவதூஉங் கவர்ந்து மேற்பாந்
தப்பா னின்ற வளப்பரு நீர்மையு
மிதயத் திருவி யியக்கிய பண்பும்
வரைகுறை நீயென நிருவிகற் பாகித்
தம்முட் டெளியு முதுக்குறை வும்மே
யென்றிவ் வெல்லா நன்றுமுந் தறுக்கும்
ஞான காண்டமென் றனவோர் படலங்
கூறாக் கொண்டு விரிந்து சேறலிற்
பொருட்டுணி புணர்ந்து புலப்பட நேர்ந்து
பெறலருங் குரைத்தே யாகலிற் றிறம்பட
வொருகா லிருகா லன்றி முக்காலு
நின்பெயர் மூல மனுவொடு புணர்த்துத்
துளக்கற முடிந்தது முடித்துவிளக் கினையா
லஃதுய்த் துணர்ந்தோ ரறையக் கேட்ட
மாத்திரை யலாது மனங்கொள் கிலெனே
யறக்கழி வுடையன திறப்பட நினைஇப்

படிறுகா தன்மை நிம்பிரி யடுசின
மருட்கை மூதற்படு வலையிற் சிமிழ்ப்புண்டு
விழுக்கா டான வழுக்கே பெருக்கிப்
போநெறி யறியாது புரைபடு வேனுக்
கோம்படை மன்ற வுவந்தீத் தருளுக
தடித்துவிரித் திடித்தரப்பிப்
பத்தியினு னித்திலங்க
டெறித்தென்ன வுறைத்துளிதூய்
விரிகின்ற கருவிமழை
பலதுஞ்சுந் தலைமருங்கின்
வரைவாழ் வாழ்க்கை வளம்படுக் குநரே
யரும்பெறற் கற்புத் திறம்பிற ழாது
மெய்சா லொழுக்கங் கைபோ தந்த
வமையம் பெறாஉம் பேறுமற் றியாண்டும்
பிரியா துடன்வாழ் வாழ்வினின் றேமை
நோக்கி நகுதன் மீக்கோ ளிலையிலை
யென்றுங் காய்ச்சிய ரெதிர்நக நக்க
நுண்முகைப் பல்வீ யெண்டிசை நாறுந்
தளவுமலர் முல்லை வளம்படுக் குநரே
புகன்று பொருள்பரந் தகன்றுபல வாகிப்
பன்னெறி முறையிற் கல்விமன் னுதலா
னஃதொரு நெறிப்படுத் தார்த்து வாயிலின்
புலநிறைந் தொளிரப் புலம்புரி பயன்கொள்
வித்தகஞ் சான்ற மெய்த்தவர் கடுப்ப
மாநீர்ப் பெருக்கைக் கால்வழி போக்கி
மடையுறத் தேக்கித் தடம்பணை நிரப்பி
விளைபயன் கொண்டு வளம்படுக் குநரே
யென்றிவ ரெல்லாங் கொன்னே யியங்கன்
மண்ணுல கன்றிமற் றென்றுமின் றுயிற்
றளத் தணிந்த மரகதப் பந்தரிற்

கணங்கொள் போது மணங்கமழ் பைந்தளிர்ப்
பொகுட்டரைப் புன்னை யகவி யிருந்தங்
குணங்குமீன் கவர்புள் ளோப்பிய வுமட்டியர்
குரவை யயரு மருங்குசூழ் கிடந்த
பாக்கத் துற்ற நீக்கமி லுமணர்
திமில்துணை யாகத் தீம்புன லுலகுந்
திரிதந் தன்னுழி யன்னுழிச் செறிந்த
பெருவளங் கொண்டு பிறங்கு வேழுக்
கெதிரா வரோவென் றெதிரெதி ரியம்பிச்
செப்பரு மகிழ்சிறந் தொப்பற் றுலாய
கழிக்கரை வேலி யொழுக்கிய மருதத்
தெல்லை யுடுத்த தில்லை நாயக
வறுமீன் காதல வறுமுகப் பரம
வறிவினைக் கூர்க்கு மாருயிர்த் துணைவ
குன்றிற வோச்சிய வென்றிவேற் குமர
மாவாழ் மார்பன் முதலா
வேவரும் பழிச்சு மிறைமை யோனே. (எ)

தோழிதலைவற்குக்கூறல்.

இறையவனே நீயென் றெனதுமக ளோதி
நிறையழிந்து நேர்காற் சிலம்பு—பறையொழியத்
தங்கினள் தில்லையிடம் பெற்றுத் தழாதொழியி
னெங்குனருள் வேற்குமர னே. (அ)

நெஞ்சொடுநோதல்.

ஏற்றிவரெம்மான்குமாரன்முருகனெழிற்புலிசை
மாற்றுயர்பொன்னம்பலமிடமாஞ்ஞேன்வளர்மொழியின்
பாற்றருவள்ளிமணாளன்றிருத்தகுபாதமலர்
போற்றிவணங்கிலைநெஞ்சேயுனக்கெவர்போதிப்பரே.

அருணிலைகூறியுறுதிதருகென்றல்.

போகாது தலைநாட் புரைபட விரிந்த
வொப்பின் மைகூர் கப்புபே ரிருளி

வினையவி யளவு மெய்யறி விலாஅ
துறுகல் லென்ன வறிது பட்டுக்
கையறவு கொண்டு நொய்தி னேத
றவிர்ப்பான் றிருவரு ளவிர்தந்து விளங்கலி
னெமியே முடல்பொரு ளாவிமூன் றனு
மீங்கே துய்த்தற் கேற்பன சிலவே
யாங்கே துய்த்தற் காவன சிலவே
யிருவயிற் றுய்க்க வருவன சிலவென்
றுமுறை யீட்டிய தூலவா காமிய
முற்றிய புத்தி பற்றி மாயையி
னூடமர் சஞ்சித வீடு கூடிய
பேரின்பக் கோர்நிலையென்
றறைவாழ்வி னுறைதருமா
றுடன்றெழு மெழுநாச் சுடாநனி பாப்பும்
வன்னிச் சூடெனத் தன்னிற் பிரியா
துற்றதா தான்மிய சத்திதுணை யாகப
பரிக்கிரக மாயையி னருவினை துய்ப்பா
னூறுபா டறிவ வுருசித் தறிவ
நாற்றத் தறிவ நன்றேக் கறிவ
சத்தத் தறிவவென் றித்திற வுருவுஞ்
சூழியற் கருவி வாழிட மற்றுப்
போகமும் பிறவும் பாகுபா டாகத்
தந்ததூஉ மன்றி யெந்தையெம் பெரும
மெய்பெற வுள்ளத் துய்த்துணர் காட்சி
யதுவும் போதா தாருயிர்க் குயிராய்க்
காணு முதவி காட்டு முதவி
யென்று புரிந்திட் டிடையறவு போகத்
தோன்றாத் துணையாய் நோன்று வருவினை
யாதியான் மிகமுன் னேதுமுந் தெறியா
னடைய விடுத்து நடவுநாண் முறையி

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY TIRUVANMIYUR, MADRAS-41.

னெண்ண மின்றியு நுண்மை யணுவின்
முறுகிய புண்ணியஞ் சிறிது சிறிதாக
வடிப்பட நேர முடிப்பரும் பாச
வின்னாங் கென்பது துன்னா தொழியத்
“தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி”
யனுபவ நெறியா னறிஞ ருரையாற்
சிறுநலங் கருதி யரிய நோன்புசெய்
தன்னது பெற்றுமகி ழார்வத் தம்ம
சரியை கிரியை யோகஞ் சரித்து
மறவினை யுறாஅ வறவினை யுறாஅ
விளிவில் காட்சி யுள்ளத் தொளியைக்
காணு முயர்நிலை கைவந் திடுநாட்
குருவே போலக் குவலய மணுகுபு
வுரிய நோக்கிற் சஞ்சித மெரிய
மயர்வற வுணர்த்தலி னாகா மியமும்
பெருகா தன்றே பிறக்கிட் டொழிய
வுடற்பினர்ப் பிராரத் தம்மொழி யும்மென
வாணை தந்து மாணருள் புரிதி
யென்பது நின்னருட் கிசைவு தானே
முன்மலி யநாதி கன்மமா ருயிர்கட்
கேவல விடுத்தல் பொதுவிதி கால
நியதியிற் றனித்தனி நிறுத்தி யூட்டல்
சிறப்பா மான்றோர்க் கிருவினை திறம்ப
வொருவினை யுறுத்த லெய்திய தின்சிறப்
பிந்நெறி பிறழாமை யிகத்தலில் காப்பென
லுரைவழக் கேனு மும்முறை விலக்கிப்
பிறிதொன்று கூறலும் பெரியர்தம் பண்பே
துயல்வரு கடம்பணி புயமலை யாள
வுலகம் பழித்த தடங்கலு மொரீஇத்
திருந்திய கொள்கை யருந்தவ முற்றிப்

பண்ணைப் பழுத்த புண்ணியர்க் கருள
லரிய தன்றுமற் றெளிய தாமா
லொன்றினும் பற்று தோடி யோடிக்
கன்றிய நெஞ்சவாக் கொன்று கரைகாணு
தெய்யாமை மிகமிக வுய்யா வகையிற்
சூறு வளிமுற் கறங்கெனச் சுடரென
வலமரு வேனுக் கங்க ணளித்துத்
தகவிரு வினையுட னுகர்பிரா ரத்தமு
மொருங்கே நீறுபட் டொழியக் கடிந்து
வானு ஞானுக் கினியா லனற்றிப்
பிறவாப் பெரும்பே றீதி யிறைவ
கோழரை மேய வாழையைக் கனலச்
செய்வ தூஉஞ் செய்தற் கரிய
செய்தார் பெரிய ராவதூஉஞ் செம்மால்
செந்தளிர் பைந்தளிர் விராஅ யந்தரந்
துன்றிய மரனனி யிருள்செய் தென்னச்
சேண்டவழ் நிறத்துகி லாண்ட சீர்க்கொடிக
ளிழுமென வருவி நிலம்விழுந் தென்னத்
தூநீர் வண்ணச் சுதைதன் பண்பே
யிருமருங்கு கிடந்த மணிநிரை யென்னக்
கைவல் கம்மியன் பெய்வளத் தரள
மீட்டியற் சாந்த நிலைமுகங் காட்டா
தூரக்கோல் தொடைஇய வரிவி லேந்தித்
திறநிலை தாய விறலுள ரென்னக்
கண்ணிமை யாத சீற்றக் காவலர்மு
னெண்ண கில்லா யாவும் புடைபரந்
தோங்கி நிவந்த பொலங்கோட் டுயர்வரை
மல்குத லென்னப் பல்குடுமி மாடங்கண்
மாழ்கில ரென்பது போழ்படத் தற்கா
ணையக்தீ ரறிவரு மையாந் திடச்செய்

பெருவளங் கவின்றுமுறை யொழுகிய மறுகு
பலப்பல நிலவிய புலிசைமா நகரோ
யோருரு வதனி லாறு முகங்கொ
ளண்ணு லென்னிரு கண்ணினுண் மணியே
தப்பில் கேள்வி விப்பிரர் தலைவ
வுணர்குதி தமியேற் குறுதிதரி
னிணைதபு திருவருட் கெழில்சிறந் திடுமே. (௧௦)

தோழிகார்வரவுரைத்தல்.

இடுகும் மருங்கு லெழில்வளருங் கொங்கை
வடுகிடந்த வாணெடுங்கண் மஞ்ஞை—கிடைநிலையிற்
போமுன் புலிசைப் பொருவேற்[குகன்வருமென்
றுமின் னெழிலிவந் தன்று. (௧௧)

எதிர்கோள்விழைதல்.

அருமந்தநின்னடியாமலர்நாளுமகமலர்த்தி
வருமந்தமாமதுவுண்டிறுமாந்துவளம்படுத்துப்
பெருமந்தமின்றிப்பிறங்கலெஞ்ஞான்றதுபேசுதியாற்
கருமந்தவிர்த்தபுலிவனத்தாறிருகண்மணியே. (௧௨)

திருவருளின்றியமையாமைகூறல்.

கண்ணிணை யென்று கருமணி யென்று
வாவயி னுலாய பாவை யென்று
வுள்ளத் தொளிர்ந்த வொள்ளொளி யென்று
வுறுபொரு டெளித்த வறிவே யென்று
நேரதன் றுணையாம் பேரறி வென்று
வரியதி னரியது தருவித் தருவி
யுரைத்து முரைத்து முன்னியு முன்னியு
முரைமன மிறந்த வுறுபொரு டானும்
வானெனப் பரந்துந் தானென முனைப்புழி
யப்பாற் கப்பா லணுகா தொருவலி
னறிநிலையைப் புறம்படுத்தே

யாராக் காதல் வழிவழி சிறந்து
யவனர் தீட்டிய வோவியச் சுடரிற்
பலர்புகழ் கதிர்செய் பகலிரா வற்றுக்
கண்ணிற் காணு நெஞ்சி னினையா
வினிது மகிழ்துய்த்தன விருக்குநர் சிலரே
யகம்புறக் கரண மிகவா தொருங்க
வாசன நிரலே பயின்று ரேசக
பூரக கும்பக புரிவினுண் மடங்க
நிறுத்திப் பிறழாது நிற்குநிலை நேசித்து
வாய்ந்த சமாதியின் வாயு மூல
குண்டலி யெழுமதி மண்டலத் தமுதுண்
பொழுதுணர் நாத சிலம்பொலி யெழவெழச்
சோகம் பாவனையி னேக மாகிப்
பெரிதுமகிழ் துய்த்துப் பிறங்குநர் சிலரே
மறைநுவன் மந்திரங் கிரியை பாவனை
மலைவு றுமே நிலமுன் னைந்து
சுத்தி செய்து பத்தி பெருக்கி
நாண்மலர் பலப்பல தாண்மலர் தூஉய்
நறும்புகைத் தூப தீபமும் பிறவுங்
கொண்டுநின் றிருவடி யெண்ணி யெண்ணிப்
போற்றுபு வணங்கிப் பொலிகுநர் சிலரே
புறத்தொழி லொன்று நின்று புரியா
தறத்தொழிற் காவன வனைத்து மளித்துக்
காலை மூன்று மியாமந் தோறுங்
கோயிற் பராவிக் குலவுநர் சிலரே
யென்றிவர்க் கெல்லாந் துன்றிரு வினையுங்
குறிநிலை வழாத கோலே போறலி
னெய்துவர் கந்தழி யென்றிசி னோரே
யிந்நெறி யுளாரொணுஅ விந்நெறி யிலாரொணுஅ
நகைத்துத் திகைத்து நடலை மிகுத்த

முடலை யாக்கை முதியோ ரொருஅப்
பொருதிறன் மிகுபுலிப் போத்தும் வெரூஉ
மெறுழ்வலி யடுதிற லிளையோ ரொருஅக்
குதலை நிரம்பா மதலைய ரொருஅச்
செல்வர் வறியர் கல்விய ரொருஅ
நொதுமலர் பகைவர் நட்டோ ரொருஅ
வின்பினர் துன்பின ரிடையுள ரொருஅ
வாண்மை திரியா வாடவ ரொருஅப்
பெண்மை திரியாப் பெண்டிர்க ளொருஅப்
பல்வேறு பெயரிற் றெய்வம் பழிச்சி
யொழுக்கந் தவிரா வுறுவர்க ளொருஅக்
கடவுளில் லென்று புடவியிற் கூறி
யேக்கழுத் தங்கொ ளேழைய ரொருஅ
வேறு படுத்துத் தேறு கிற்றில
மருமறை விதியுளித் திருமணங் காணாஉ
மூவகை யாக மேவுந ரியாரும்
விரைய விரைய வருகதில் லம்ம
வுள்ளுணர் பேரொளி தெள்ளிதிற் காண்குதி
ரையரும் பாச மையிரு டொலைக்குதி
ரொன்றே யிரண்டே யொன்றிரண் டற்றுக்
கலவத் துவித நிலையின் மீளா
திருந்து சிற்சுக மருந்துதி ரருந்துதிர்
போதுமின் போதுமின் புகுமின் புகுமின்
கொண்டி கொண்டியிக் குவலயக் கென்றே
யெண்டகு தனிவாழ் வெளிதி னளித்த
தண்டாக் கொடைமடங் கொண்ட வள்ளால்
நின்னை, உடம்பினு ளுயிரா வுயிரிடங் கொண்ட
குகனென் றுரைப்ப குணமாண் டோரே
யதனான்,மருடீர் காட்சி யறிவாற் பயின்று
கிளர்மறைச் சிறுவர் கிடைபெறு தழனியும்

வடசொல் தென்சொல் புடைபட வொற்றிப்
பொய்த்தகங் கோடா மெய்ப்பொருட் காட்சிப்
புலனுழு துண்மார் கடாவிடைக் கலிப்பும்
புறத்துறைநட் டகம்வேர்ப்பார்
போலாது சினம்புரிந்து
காதல்புறங் காட்டா மங்கையர் மீதலத்
துருமு வீழினு முள்ளறை போகாத்
திறலா டவர்மன னுருவிலிக் குடைந்து
தம்வழிப் படூஉந் தனிவா மிரப்ப
முள்ளரைக் கொடியின் மயிர்க்கூச் செறிந்து
மதிமுன் மறையென மலர்முகங் குவிய
நுதல்வெயர் பொடிப்பக் காதலர் மார்பத்
தோச்சிய சீறடிச் சிலம்பி னொலியு
மாவளம் பழுநிய வாவண வரற்று
மொன்றுதலை மயங்கி யோவாது கறங்குந்
திருவநீ டில்லைச் சிற்றம் பலவ
நினைவார் நினைவு நினைத்த வாறே
யாங்காங் கருளு மறுமுகத் தண்ண
லுயவேயிலாத மயறிரண் டன்ன
குருகு பெயரிய வரைபக வெறிந்த
வறிவு பெயரிய வரிவேற் கரத்த
பலகலை பயின்ற புலவ ரேறே
யென்று வாங்கிடந் தேற்கு
நன்றுநின் றிருவடி யன்றிமற் றிலையே. (கரு)

உலகின்மேல்வைத்துற்றதுரைத்தல்.

ஏனோ வுலகீ ரெஃகேருண் கண்ணார்முன்
னானோர் மயலி னலமந்தீர் - வானோர்
நலம்வளரக் கண்ணருளு நம்பன்முரு கோனை
வலம்வரா தொண்புலிசை வந்து. (கசு)

வினைவலிக்கிரங்கல்.

வந்துற்றுவேண்டியவேண்டியாங்கெய்தவளமையினுற்
றந்துற்றனையென் றருந்தவத்தோர்முனஞ்சாற்றுமொழி
கொந்துற்றபூங்காவனந்திடுதில்லைக்குகப்பெரும
முந்துற்றவூழ்வினைதட்குமதென்னமுறைறமையதே. (கரு)

நிலையாமைகூறிநெஞ்சறிவுறுத்தல்.

தேர்ந்து தேர்ந்தவை யற்றை யோர்ந்து
தெளிகுநர் புலனிலை விளியா திருந்தாங்
கற்றமொன் றின்றி யமைதி யாகுக
வினைநலங் கனிந்த மனமெனுந் துணைவ
வாழிய பெரிதே வாழிய பெரிதே
கரைபொரு தலைத்து நுரையு மணியுந்
தலைமயங் கியசீ ரலைமுன் றுனை
முந்நீர் வரம்புடுத் துலகத் தந்நீர்
நுண்டுளி யினிற்செறிந் தாண்டாண் டுள்ள
குலம்பெறு பொருளெலாம் புலம்படுத் துணரிற்
சிலசில தம்முட் கலாவிநிற் குநவுஞ்
சிலசில தம்முட் கலாய்த்துநிற் குநவு
மரியவு மெளியவுஞ் சிறியவும் பெரியவு
மென்றுங் கிருந்த வியற்கைய வேனு
மஃறிணை யுயர்திணை யாயிரண் டாகி
யறிகுந வறிகில வென்றடங் கும்மே
யவற்று, ளாட்கை யறிவின் வின்பே வேட்குங்
கடிவின் றெழுகிப் புடைபெயர் வாயி
லோரைந் தானு நேரின் பொன்றே
புடைபெயர் வின்று நின்ற வடைவே
யைம்புல நுகரு மின்ப மொன்றே
யொருபுலத் தொருசா ரோரின் பொன்றுழி
மற்றைய வெய்து பட்டொழி யும்மே

யோரொரு வைகலிற் பேரின் பீருந
பின்னொரு வைகலி னின்னல்மிக் கீமே
யுய்வகை யிலாதே யைவகை யானும்
வருந்துயர் கொண்டு பிறந்தை யெய்துழித்
தோன்றிய கடும்பசிக் கன்றே யுள்ளுடைந்
தருள்வள ரன்னை மருமங் கவர்ந்த
சீரம லருமுலை யாரமு துணவுண்
டறிவின் றுரு மின்ப மொன்றே
சிறுநடை பயின்றுஞ் சிறுதே ரூர்ந்து
மிகாஅ விளமை மகாஅ ருடனே
யாடலில் வருமின் பொன்றே யேடவிழ்
மணமலர் வெள்கு மென்மையுங் குணனுந்
தங்கிய முகனு மங்கை யன்ன
தடவிழி யிணையு நெடுமலைத் தோளும்
வீணைத் தண்டின் மாணலங் கெழுமி
நிலத்தே தோய்ந்த வலத்தினொண் காலும்
பங்கய மன்ன வங்கழ லடியுந்
தனைப்பிறி தொவ்வா வனப்பிற் சிறந்து
சுடர்விடு மங்கி யிடையகத் திட்ட
வாய்தக் குறியின் மீயுய ரடுப்பி
னிரீஇய குழிசி முரவை கழீஇய
புனைநறு முல்லை நனையி னனைய
வால்வெள் ளரிசி மிகைகுறை யேலாது
கடிவின் றட்ட வொடியாச் சொன்றிப்
பொன்னொளித் துவரம் புழுக்கல் நன்னர்க்
குய்ம்மண மணந்த செய்யவெங் கருணை
புளிபெய் தட்ட நளிசுவைப் பாளிதஞ்
சுவைநன் றட்ட புதிய நறுநெ
யைதமை நுசுப்பி னாய்ச்சியர் சுமட்டிற்
கொடுதந் துய்த்த நரைவெள் ளமுதொடு

பழனுங் கன்னலும் விழைஇய வாங்கே
யரம்பை நெட்டிலை நிரம்ப நிரப்பி
யடுதொழி லாளன் புடைநின் றூட்டத்
தனித்தனி சாணூஉ வினித்த முகனொடு
மாந்தி மகிழின் பொன்றே கூர்ந்து
வெழுமைம் புலனுங் கமநிறைந் தேன்ற
வன்பிற் பிரியா தைவகை யமளி
நுரைபடர்ந் தன்ன மேம்படு விரியிற்
கருவி மேக மொருசா ரகத்
திங்கள் கிடந்தன்னத் தங்குவாண் முகனு
மறற்கருங் கூந்தலு முருக்கல ரகவயிற்
புன்னை முகிழ்த்தன்னச் செந்நிற விதழு
நகையும் வரைபோன் மிகுநலங் கொண்ட
விழைதவழ் முலையு நுழைமருங் குலுமற்
றவாவிடை யடங்கா வல்குற் பரப்பு
மாறில் பைந்தளிர்ச் சீறடி யிரண்டு
மெனவுருக் கவினிய நனைமலர்ப் பாவை
யரும்பெறற் காட்சி யமுதன் னாளோ
டன்றில் தனித்தே யகலினு மகலாது
நுகரு மின்ப மொன்றே தகவுடைக்
காமரு நோன்பிற் காதலற் பயந்து
மெய்பட விதிர்த்துக் கைபடத் துழந்த
வமுதச் சுவையின் பொன்றே யலகி
னெல்லும் பொன்னு மணியு நிலனும்
பிறவு மெல்லாம் வரையெனத் தொகுப்பக்
காட்சியு மணுகாச் சேட்புலங் கிடைத்துக்
கலத்தினுங் காலினு மகலா முயலவிற்
பண்ட மாற்றுறி யகாணமு கொண்டு
கவர்க்கு மனத்தோ டிவறிக் கூட்டி
யோருழி யெய்தின் பொன்றே நேரிய

விவ்வெலா முறைசெய் தெண்ணிக் காணின்
முதனிலை துன்பா வதனொடு முரணி
நறிதுபடு மின்பபோன் மறுநிலை யெழுந்தன்
றெனினு நரம்பாற் புனைமுடி ஞெகிழ்ந்து
தசையுந் திரங்கி வசைபட நரைத்து
நடைசெல்லா து திடறிவீழ்ந்து
தண்டூன்றிக் கொண்டிருமிக்
கோழை மிகமிகச் சூழுநர் யாரு
மருவருத் தனுகா தகறல் காண்டொறு
மெய்த்துநனி யுய்த்துணர்ந்தே
யிரவலர்க் கியாது மீந்தில மந்தோ
குருபர சிவகுகன திருவடி மலர்ந்த
வுள்ளத் துறுவரை யெள்ளின மந்தோ
வறத்தின் பகுதி யகத்து நினையாது
மறங்கூர்ந் தம்ம மக்கட் கென்றும்
விழையு நன்மனைக் கிழத்திக் கென்று
மிவர்தமக் கென்று மவர்தமக் கென்று
மடைவே யறுதி யிட்டுக் கொடைபெறக்
குழுவந ரல்லான் விழும மிகத்தினை
பாயெனு மிஞ்ஞான்று பரிந்தில ரந்தோ
வென்னே யிவர்பண் பென்னே யிவருற
வென்று கவன்மிக்குப் பொன்றுநர் பலரே
யிடையிடை, வருத்து நோய்பல வுருத்துக் கடுகு
மதனு, லைம்பெரும் பூதத் தொகுதியி னமைந்து
நலந்தீங் கென்பன கலந்து நுகர்தற்
கேன்ற துடறு னென்னினு மிஃதுள்
பொழுதே விழுப்பொருள் கோடல் வேண்டு
முலப்பில்பே ரின்பக் குறையுண்மற் றதுதா
னுரைக்கவு நினைக்கவுங் கூடா மறைமுதல்
மயற்கை யின்றி யியற்கை யான

வறிவு மயமாய் விளங்கும் வெறுவெளி
மறுவில் காட்சி யறுமுகத் தொருமணி
குயினெல்லாம் வயினமர
விண்ணிடத்து நண்ணித்தா
யிமைத்தறியா தமைத்தவிழிப்
பொன்மேனிப் புங்கவரும்
பொலம்பூத்த நிலவரையாத்
திரியக்கொ ளுரிமையினு
லயர்ப்பின்றி யாட்டயர்ந்து
நீர்வரைப்பிற் றுனிறங்கித்
தவவொளியிற் சிவணியசீர்ச்
சிற்சபையிற் றிருவுருக்கொ
ளருளாளன் குறிகண்டு
கரையிலன்பா லுரைகுழறிச்
சிரமுடிமேற் கரமுகிழ்த்து
வரங்கிடந்து குறைமுடித்தங்
கேகிச் சென்மா றிலங்கிய சிகரி
புறஞ்சூ ழொருநான் கடுக்கலிற் பொலிய
வகஞ்சூழ் மேருவிற் றனிமன் றவிரு
மெல்லைதீர் புகழார் தில்லைமா நகரி
னிடங்கொண் டமர்ந்த கடவுட் குரிசி
னினைத்தவ ருள்ளத் தினித்த குகவே
ளெண்ணில் பெரும்பெய ரெண்ணில் பேருருக்
கொண்ட முதல்வற் கண்டு பராவி
யுறுகுறை யானு மோதிப் பெறலரும்
பரசுகப் பெருங்கடற் படிந்து
வாழிய வாழிய வாழியென் னெஞ்சே. (௧௧)

நெஞ்சுவிடுதூது.

நெஞ்சே நெறிக்க ணிகழின்பின் மாழாம
லஞ்சே லனகண்ணு ளம்பிகைதன்—செஞ்சேய்

புலிவாழ் கடற்றிற் புகூக்கண் டிறைஞ்சி
வலிவென் மெலிவோதி வா. (கஎ)

துணிபுரைகிளத்தல்.

வாவாவென் றங்கைக்குறிப்பின்விளித்த வருநர்தமக்
கோவாதவின்பீந்தருணடங்கண்டவொருவனுக்குத்
தாவாதபேரின்பருள்பவனீயேற்றவிரவுண்டோ
மூவாமுழுமுதல்வேலோயுலகமுழுதிறகுமே. (கஅ)

உய்வகைவேண்டித்தெய்வதம்பராயது.

முழுநெறிக் கைகோண் முறைமை சான்ற
வருந்தவப் பண்பி னறவர்ப புரைந்து
புறநலம் பூப்ப வகநலம் புழுங்கி
முடியா வனப்பி னொடியாப் படிவுகொடு
யோகிகட் புலனும் பற்றா வோரணு
விறப்பவும் பெரிதா வெதிர்பட நிறுத்துங்
கட்டழ குடைய காளை யொருவன்
வாணிடு வில்லிற் கூன்பெற வழங்கியுங்
கண்கூ டாகுந காணாது கரந்து
நிரம்புமா றின்றி வரம்பிறக் சால்விசைத்
தோடுமுளத் தொருபொருளைக்
குறித்து வருநர் கொள்ளைபெற வளித்து
முடம்பா டெதிர்மறை யெதிர்மறை யுடம்பா
டென்றொரு கணத்துண் மயங்க வியற்று
முடிவி லாற்றன் முழுமுத றானெனப்
புரைபடு நடிப்பிற் றிருமா றிரிப்பப்
புனல்வழிப புணைபோன் மனவலி பிறழ்ந்துமன்
னிறும்பூ துடைத்தே யிறும்பூ துடைத்தே
யிவர்செய்பல் விச்சை யாண்டு மிலையிலை
யெம்மிடர் பாற்றுந் தெய்வத மிவர்கொலென்
றுளங்கொளக் குறிசெய் தொருபடித் தாகிப்

பேதுற லின்றி மாதுட னமர்ந்த
திருத்தகு படிவங் கருத்துட் படாஅ
தஞ்சுதக் கனசெய் தரும்படர் விளைத்த
பதகர் வாழ்க்கை யிடமும் மதிளோ
டங்கியங் கடவுட் கார்த்தமு தாக
மூடிய நுதல்விழி னெகிழ்த்து மூவர்க்
கொப்பிகந் துய்தி யுறுத்துமெம் பெருமா
னூனுழை புலத்தா னுணுகியாய்ந் தெய்த்துப்
படுபசிக் குடைந்தோன் பதம்வேட் டாங்குத்
தன்னடிப் படூஉம் பருவத் தாபத
ரருண்மிகுசெம் பொருள்பெற்றுத்
“தன்னை யுன்னி யென்னை யாக்கிய
போழ்தே யானவ னாயினே” னெனாஅப்
பிறிபடா வின்பப் பெருக்கிற் றிளைப்பா
னருண்மடை திறந்து கரமலர் மருமத்துச்
சேர்த்தி யாரரு ளல்கிய செம்ம
றிருநுதற் கிளர்ந்த விழியிற் றீப்பொறி
சூர்த்த நோக்கிற் சூர்துய ராற்றிப்
பெருவளங் கொண்டு பேணாக் கடுஞ்சிறைப்
படுத்தலி னுய்யாக் கடவுளர் தந்நோய்
தவிர்பாக் கருளுருக் கொண்டநந் தலைவ
னறுமுகப் பெருமான் றிருமகண் மருகன்
விலங்கலி னியாதுங் கலங்கா மள்ள
ரூக்கிய வுழப்பி னொருநிலம் படுத்து
வெள்ளி யன்ன மேனீர் தேக்கிப்
பானிற மோவாத் தூநென் முளைவித்து
விளைநிலம் பிறகோட் படாது மிளைசெய்
தருந்தவ மகப்பேற் றன்னையிற் பேணப்
பணைத்து விறந்து பயின்று கடைகுழன்று
படர்ந்த பயிர்தான் பச்சென விடையிட்

டொருநெறிப் பொன்செய் தாமரை யுயர
வெரிகிளர்ந் தன்ன திருமலர் வாய்விரித்
தாழ்வரி ஞிமிறொடு பணிந்துசூழ் கிடப்பச்
சிதல்படு மருங்குற் றிறல்படு வாளை
கவைத்தா ளலவன் களித்துவாழ் தோற்றந்
திவளொளி மரகதப் பந்தர் செய்து
பொலஞ்செய் கூம்பு மீமிசைப் பொருத்தித்
தெள்ளத் தெளிந்த வொள்ளொளி விளக்கம்
பாங்குற நீறீஇப் பான்மை யோவா
துள்ளகம் வாழ்வுற் றுலாஅய்த் திரிந்து
செருக்கிய திருவளர் செல்வர் போலும்
வளவயல் சூலாய வளவில்சீர்ப் புலிசை
மாநகர்க் கரையன் வரிபாண் முரன்று
தேனுகர் கடம்பன் சீறடி பரவுதூஉ
முத்திறப் பகுதி முடியா வறப்பய
னார்த்திய தெய்வதஞ் சிலவே யதாஅன்
றிருதிறப் பகுதி யிகவாப் பொருணல
மளித்திடு தெய்வதஞ் சிலவே யதாஅன்
றொருதிறப் பகுதி யுலவா வின்பஞ்
சேர்த்திய தெய்வதஞ் சிலவே யென்ப
வவற்றுள், காட்டத் தனறுன் காணு தொளித்தாங்
குண்ணிலை யாகி யுவர்செயன் முற்றித்
தானெப் பொருட்குஞ் சார்பென நின்று
தற்கொரு சார்புந் தழாது நின்ற
நுண்மை மாட்சி நொந்தா வொண்சுடர்
நீயே யின்றிப் பிறிதின் றுத
லமிழ்துாண் மடுத்த விமையவர் குழாமும்
வீடரும் பேரவா முடிவு போகப்
பல்வரப் பேற்றின் வெல்சூர் முதலுங்
காண்வர நிறுத்த காட்சியிற் றெளிதுந்

திருவருட் குறிப்பின் றுண்டே போலு
மாகலிற் பெறலரு மன்பீங்
குடற்பயன் பெறுமா றுதவு மென்றே. (௧௯)

மாலைவேட்டல்.

என்றே பெறுவே னெழிலார் குகப்பெருமான்
கன்றே குணிலாக் கனியுகுத்த—வன்றனது
மாமருமான் றென்புலிசை வாழ்பெருமான் றோட்கிடந்த
தேமருவு தாருதவுஞ் சீர். (௨௦)

காமமிக்ககழிபடர்கிளவி.

உற்றிடத்தன்பருதவியைக்காணுவரொண்புலிசைத்
துற்றிடத்தார்ந்தகுமாரற்கெனதுதுயரமெல்லாங்
கற்றிடக்கூறிலிர்மான்காளளியினங்காள்விழிபோற்
பெற்றிடக்கற்றனிரீதோநமக்குப்பெருமையதே. (௨௧)

கடலிடைவைத்துத்துயரறிவித்தல்.

பெருந்துய ருழந்து பீடிலா தலமந்
தலைகிய மாக்க ளலைதொழிந் துய்த
லுள்ளுறை யாக வுரைகிளத் துழிமற்
றவர்குறை பெய்த லந்தண் ணறிவே
கவன்மிகு மனத்தோ ரிங்கிதங் காணூஉ
வவர்குறை பெய்த லறிவினுக் கறிவே
யலறி யலறி யாற்றி யாற்றி
யுரைப்பவுங் கேளா தூடறுத் தோப்ப
விளிவே யிங்கிலை தானு மின்றித்
துன்பினர் நுகர மறுவலுந் துன்பே
யியைய வியற்ற விளிவினு மிளிவே
முன்னிலை யிரண்டுந் தங்கிலை யென்னக்
கருதி னேரே பெருநீ ராள
ராளப்பருங் காட்சி வளப்பெருங் கடலே

மின்னொளி கான்று கொன்னே யுறநிக்
கைம்மாறு கருதாது காசினி யும்மார்
பெய்து நலம்படுத்த பேரா வெழிலி
யுண்டுதேக் கெறிய வுதன்பசி சிந்தலிற்
சிந்துவென் றொருபேர் சிறந்தனை யன்றே
முடிக்கரும் பெருநோன் படிக்கடி நோற்றுநல்
லறம்புரி வினைமேற் கொள்ளலிற் றிறம்பா
துறுபய னிவணென் றொன்று மின்றே
தண்டளிர் முட்டாட் டாமரை பாய்ந்தங்
கிருகயல் புரண்டன்ன விணைவிழி முகனு
மெலிந்து நைதல் கண்டுமேன் மேலா
வரும்வலி யாளரின் வளர்முலை மேலெழு
வுதுதனைக் கண்டுள் ளுடைநரின் மாதோ
தேய்ந்தழி மருங்குலு மேய்ந்தன பிறவுங்
கதிப்பக் கொண்டிவள் கவினு மிஞ்ஞான்
றொருதனித் தலைமைக் குருபாற் குறித்துக்
கண்ணிலா தியாருங் கையகப் படேஉத்
திரிதரு மாறே மறுக்கஞ் செய்யு
மயற்றனை தளைஇய வைம்புலத் தயர்வு
தபுக்க வேண்டுநர் தன்வச மழியா
நெஞ்சநனி நெகிழ்ந்துருகிப்
பாடு கிடந்த பாங்கமர் பொன்மன்
றிடங்கொண் டருளு மெந்தா யெந்தாய்
வீறுபடு குன்ற நீறுபட வெறிந்த
வைவே லெடுத்த தெய்வதக் குரிசி
லாருயிர்க் குயிரே யன்பருக் கெளியோ
யென்று பிதற்றி மன்ற னெய்தலிற்
பொலிந்த வுண்கண் கலுழ்ந்தன ளாகி
நோத லானாப் பேதையா யினளை
மன்னுதற் கரிய வென்னரும் பேற்றை

வருகுடிக் கேற்றிய வொருமணி விளக்கைக்
கட்புலன் சுவைகொள் விட்புலத் தமிழ்தை
யுலவா நீர்மைச் சலநிதி யெனப்பட்
டாசுபுரி துயர்செய் யம்புராசி வயின்பெற்
றோஒவென் றலறி யொப்பில் கடுந்துய
ருறுத்தி யார்கலி செய்குதி மன்ற
பொன்னரி மாலை துன்னித் துயல்வரூஉந்
திண்ணெ னெடும்புய விண்ணவர்க் காரமிழ்
தருள்பெருங் குணமிகு மந்தண மதிப்போர்க்
கணவற் கண்டுழி களியாட் டயர்ந்து
மல்லுழி யிரங்கி யலக்கணுற் றழிந்து
மணந்தன ரின்புந் தணந்தனர் துன்பு
மிற்றென நுகர்ந்து தெற்றென் றறிதி
யிதனை, னுனித்துணர் குறிப்பின் றேனுங் கூறலின்
றாள நிரைத்த மரகதப் பைந்தொடித்
தாங்கக் கரத்திற் றவிராது தழீஇ
நாவா யியக்கி நாமவேன் விடலையை
யிருகண் களிக்க வெம்முற் செலுவா
திருப்பது பெருநீ ரென்றொளிர் நிற்கு
மீக்குயர் விழுச்சீ ரன்றே யன்றே
நின்னுழை யவிரும் பேரொலி நிலத்தமை
பொருளொடு புணராப் புன்மைய தென்பது
பெய்தொடி யெங்கைக்கு மெய்யா காதே
யுன்பா லொன்று முறையா ளாகப்
புன்க ணியற்ற னன்கா மேகொ
லகன்றலை யுலகின் றகுநலங் காத்துநீ
லாடை யென்னப் புடைபோ யுராஅய்
நீரிகந் தறியா வாரிதிப் பெயரோய்
கல்லென் றிரங்குங் கொல்லொலி யமைத்துக்
கேழ்கிளர் மாமை கிஞ்சுகச் செவ்வாய்ப்

போழிள மதிநுதற் றாழிருங் கூந்தன்
மடந்தை தனித்துறு படர்மி காஅது
நினைந்தன மிரங்குனை யாகிற் புனைந்து
பலர்புகழ் பரப்பிய பரவை
நீயே யென்று நிற்பணி குவெனே. (உ௨)

அருணிலை கிளத்தல்.

நிறுவாது நெஞ்சந் திருகினார்க் கில்லை
யுறவாகத் தன்னடியே யுள்கிப்-பிறவாற்
றிலவா மனமுடையார்க் கின்பருளும் பொன்னம்
பலம்வாழ் குமரன் பதிந்து. (உ௩)

சென்றேனிடலிற்காமமிக்ககழிபடர்கிளவி.

பதிதந்தகாதலர்நின்பெயரோதிப்பயன்பெறுமவ்
விதிதந்தவாற்றிற்பெயர்ப்பொருளாகியவெள்ளனமே
தகிதந்துநீங்கிலேமென்றார்புலிவாழ்தனிக்கடறே
வதிதந்தவேட்கென்றுயர்கிளவாமைவழக்கல்லவே. (உ௪)

தோழிதலைவிஆற்றமைகூறிவரைவுடம்படுத்தல்.

வறனுற லென்றும் வையக மறியா
தாறறிந் தான்ற நான்மறை கூறி
முத்தீ வேள்வி முறையுளி முற்றிய
வாறுதொழி லாளர் மூன்று பருவத்து
மனுவொடு தங்கா மாநீர் விடுத்தென
மும்மழை பெய்யு முறையிற் பிறழா
நீனிற மங்கு னீக்கற நிறைந்து
காலம் பொய்க்காது மேலுறை பிலிற்றுங்
கோடுபல கிடந்த பாடமை வெற்ப
வைதுபடு மருங்கு லம்முலைக் கொடிச்சியர்
வெளிறடிந் தடுதீ விழியிற் சிதறிக்
கடாம்படு களிற்றுக் காழ்கோட் டுலக்கை

மையவனங் குறுவ வங்கை சேப்பப்
பற்றிப் பாடும் வள்ளைப பாட்டு
மாய்சிறைப் பாய்புள் வெருவத் தூய்மணிக்
கற்கவ ணூக்கிக் கடியுமா லோலமுங்
கடநா றுதலாற் கழியவும் வெகுண்டு
பன்மலர் துவன்ற வேழிலைம் பாலை
யூடுறப் பாய்த்துக் கோடுபுய்க் கல்லாக்
களிறு துணுக்கென்று பிளிறத் தெழிக்கும
வரிவில் வேட்டுவ ருரைபெறு துழனியுங்
குறிபடா திரங்குங் குறிச்சிக் கிழவ
நீளொளி மன்றிற் குமர வேளே
இவள்தான், சைவல மென்ன மைவளங் கொண்டு
பாளையி னேர்ந்து வார்ந்தசீ ரளகங்
கூட்டி நறைகமழ் புழுகுநெய் யட்டி
நிரைநிரை யாகப் பிரிவு படுத்துப
பழுதொன் றின்றி வழுவழுப் பாகக்
கொண்டையுஞ் சுருளுங் குழலும் பணிச்சையு
முடியு மெனவைம் பாற்படுத் தின்ன
மன்னே முடிக்கு மவ்வள வன்றித்
தானே முடிக்குந் தகவறி யாளே
கயத்துறை வாழ்க்கைக் கயலிற் பிறழ்ந்து
மயக்குறு மதனன் மதுகைகுறி யாதே
பாயரி படர்ந்து சாயன் மிகூஉத்
தாமரை புரைந்துங் காமஞ் செய்யாதே
மையூ னுண்டு மதர்த்துக் களித்து
நீலென நின்றுங் கோறல் புரியாதே
பெருமநின் றடக்கை வரிவேல் போன்று
மாடவர் மார்பத் தூடுரு வாதே
மடமான் பிணையின் மருளுநோக் கினளே
நாறுகர் வில்லா தஞ்செவி கூட்டுணு

மமிழ்திற் சிறந்து மழலை நிரம்பாளே
யுளதில தென்றங் குட்த்துணர் நுசுபவை
வருத்தக் கல்லாது வருமுலை யினளே
யாதலை யென்னவுங் கருதா தனையவ
ளுட்புகு தந்த கள்வ கேணீ
கம்மியன் புனையா யாணர்க் கவினு
ளகப்படுத் தார்த்த வஞ்ஞான்று தொட்டு
மெய்வரு மின்பங் கைவந்து கிடைப்பான்
பொருள்கோ ளளவையிற் போக்கின்று முடிந்த
வாசறு காட்சி யையயர் போன்று
வள்ளவா யுள்ளத் தாமரை வாய்ப்பச்
செம்மா ணீயே சேக்க நிறுத்துத்
தன்செய லற்றுத் தகவுபிறி தாகி
யுரைகல் லறியா தெரிதவழ் கொங்குரைத்
தேசுகெழு மேனி மாசொடு படேஉப்
புற்கென் றம்ம புலர்ந்து சிதர்ந்த
வேங்கை வீயின் வெறிதுபீர் பூப்பக்
காதற் பேரிற் கதழிய வெந்தீ
பஃறலை விரிந்து பல்கல் வேண்டி
நாசித் துருத்தி பெருங்காற்று நல்க
விருமையிற் பொலிந்த விரிகட லுண்கண்
பாஅனித் திலமெனத் தூஉ நீர்த்துளி
படர்முலைக் குன்றிற் றடக்கிச் சிதறப்
படுகதிர் விரிந்த பரிதிமுது வேனி
னடுகின் றழன்று நண்பகற் றெறுதலிற்
செழுவிய பூங்கொடி தழைமுகந் துவளச்
சாய்ந்தெனப் பாண்டிற் றாய்திற் பரப்பி
மெத்தென விரித்த கிடையிற் கிடந்து
புகலா வின்பிற் றலைநாட் புணர்ந்த
வுன்னத் தானு முருவெளி யானு

நோக்குந வெல்லா நின்னே போறலி
னுயிரினுஞ் சிறந்த வளப்பரு மியற்கை
நாண மென்ப திம்மியும் பூணா
தறிந்தாங் கெலாம்வாய் வாளா தாற்றிப்
புலம்பு கூர்ந்த பொன்னியற் பாவை
பேய்கோட் பட்ட பெற்றிய ளாக
மாறி யறிந்த செவிலிய ரானோர்
தேவ ராளனிற் றெய்வம் வாழ்த்தித்
தந்நினைவு முடியுமா றின்றி யினையச்
சிறிதே முகிழ்த்த வலர்நனி பரந்து
பெருஞ்சொல் லாகி யாங்கணும் பேச
நயந்துறை யானும் புனைந்துறை யானு
நின்மண வாள ரின்னே போதுவ
ரென்றுபல கூறினு மிசையா ளன்றே
யிமிழ்திரை யுலகத் தமிழ்தென் மதியு
மென்றளிர்ப் பயின்ற தென்னிளங் காலும்
விண்முடி மலயத் தண்ணென் றேய்வையும்
பிறவு மனற்றலிற் சாம்பிய பேதைக்
குலம்பெறு தடந்தோட் குலமலை பிறந்த
மெல்லிய லூற்ற மொன்றே சொல்லக்
குறியெதிர்ப் பில்லா தருணிறைந் திருந்து
புடைபெயர் கடைக்கண் ணென்றே கெடலிற்
சேண்மருந் தாக வுளங்கொளல் வேண்டு
மிமையச் செல்வி யுமையவ டனூஅ
தன்பு பெருக வசும்பூறு மொழியோய்
கீரன் பனுவ லாரமு துண்டு
மற்றவற் புரந்த வெற்றவழ் வேலோ
யிருபெண் புதுநல மினையாது நுகர்ந்தோ
யினியன யாவு மிடர்மிக் குறுத்தலி
னினியவற் றினிய விறைவவிப் போழ்து.

புறக்கணித் தனையேற் பூவைக் கோர்நலம்
பிழைபா டுறலிற் பெரிது
மனனிரங் குதனின் றனதருட் குறிப்பே. (௨௫)

அருமைசெய்தயர்ப்பத்தலைவிகூறல்.

சூலமலைக ளெல்லாங் குலாவுற் றிருந்தும்
மூலமலைகண் மேவ முயங்கி—யலமாலெற்
கீந்தேகன் மாண்போ வெழிலார்சிற் றம்பலத்து
வேந்தே தனியிருக்க வே. (௨௬)

அருணிலைபெறுதலரிதெனவாதித்தல்.

இனையாதொருபடித்தாயுட்புறம்புமிகப்பறவே
நனையார்மலர்தூய்ப்பழிச்சுநர்க்கன்றிநயக்கருண்மோ
சினையாக்கணித்தனங்காப்புற்றமுத்தஞ்செறிக்குமொரு
வனையார்தடத்தில்லைவேலோனடித்தாமரைமலரே. (௨௭)

வேட்கைநிலையுரைத்தல்.

தாதுகூட் டுண்ட தேமிறினஞ் சார்வு
பெறாஅண் டின்றென் றுபெரிதுளந் தருக்கி
யுறைந்துவாய் மடுப்பா னுறைத்துளி தூஉய்த்
தேனிறால் கிடப்பத் திசைமுகன் பராவி
நீக்கறச் செறித்த மீக்கிளர் தண்டலை
யாருயிர் வருக்கம் பேறெனத் துய்த்தங்
கிறுமாப் பாகக் கிரணவின் சுவைதரீஇ
வான்மதி கிடந்த வானங் காட்ட
வம்மென் சீறடி யரிவையர் குழூஉக்கொண்
டிணைதபு பெருநல மெய்த வேட்டுச்
சேண்விளங்கு சிறப்பின் மாணிலை தோற்றலை
நிரைசால் பல்சினைக் குராவினங் காட்ட
விழைதகப் பொலிந்து குழைதளி ரீன்று
நுண்முகைச் சிறுவீ நுனித்தலை யரும்பிச்
சிறிதசைந் துலாய வுவீன் றேமா

பொன்னுருக் கன்ன போதுசெய் பூங்குமிழ்
பவளத் தன்ன திவள்பூ முருக்கு
வெள்ளி திரண்டன்ன நித்திலம் வெடிப்பப்
பைங்குலை சுமந்த நெட்டிலைக் கமுகு
சின்னஞ் சிறிய நலந்தரு நர்க்கும்
பென்னம் பெரிய நலம்பெற வருள்வான்
பாராட் டெடுத்த சீரார் கடுப்பத்
தண்சுவை யிளநீர்த் தாங்கிய தெங்கு
தாதவிழ் மலர்ச்சுமைக் காற்றா தொதுங்கி
மெல்லென் றசைஇய முல்லைக் கொடியு
மதன்க ணிறுத்த மழையு மதியும்
பாவென மிழற்றுங் கோகிலப் புள்ளுங்
காதள வோடிக் களித்த விழியே
நாசியே யிதழே காசின் மிடறே
தசைந்திடுவெம் முலைதானே
யிதன்பொறையா லெளிவந்து
நிலையில்லா துலைமருங்கே
வம்பவிழு மைம்பாலே
களங்கில்லாக் கவின்முகமே
கேட்டொறு மின்பங் கிளக்குதே மொழியே
யென்றாங்கு, ஞாபகக் கருவியி னங்கைய ருறுப்பை
யுணர்த்தப பொழில்வளம் பொலிமே யொருபாற்
றிசைக்கூலத் திரளிறங்கு
மரக்கலங்க ணிரைநிரையா
வுலாவியநீ ரலைவரம்பின்
விட்டுவிட் டெழுந்த புளின முகட்டுப்
புலவுமணங் கான்ற புன்வலை யுணங்கும்
பரதவர் முன்றிற் சிறுகுடிப் பயின்று
வாழ்வுறு மகாருங் கோழிள மீன்பதைத்
துயிரிழந் தொழிவ துவப்பிற் காணா

மறவினை நீங்காது வளர்கழிக் கரையில்

மேனியொடு வானோக்கி
யொருவினை யுள்கா தருளே வேட்டு
"நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றஞ்"
சிறுவீழ்த் தாழை தெரிக்கு மொருபா
லென்று புறங்கிடந்த வுள்ளகத் தென்று
மிழுக்கா விழுக்குலத் திம்பரின் வந்தாங்
கருமறை யோதி வருமுறை திறம்பா
தொழுக்கிற் சிறந்துமற் றொருமையி னிருமையின்
புதவு மாற்றிற் பிரமா முதலா
வினைமா ணறிவினர் வினைத்தலை நிறுத்து
வேறுவே றுருவிற் கூறுபடு குண்டத்
தவிர்தரு மெழுநா வங்கியின் வேட்கு
மாவுதி யானு மவிசதத் தானும்
வெய்யோனுன் மிகவெதும்பு
மாதிரங் குளிர்ந்து மாவளம் பூப்பத்
திருவருள் செய்கென்று தெய்வம வாழ்த்தித்
தன்வினை பிறவினைத் தலைமைமிக் கேன்ற
மூவா யிரரொனு முனிவரர் நாவாற்
கூறற் கொல்லாக் குணப்பெருந் திருவினர்
சீரியற் றமிழுட னாரிய முணர்ந்த
திட்ப வறிவின ரொட்பமிக் குடையர்
திருநடப் பெருமா னிவர்தமு ளொருவன்
யாமென வுரைத்தற் காந்தவப் பேற்றினர்
தொழுகையி னிருக்கு மொழியிற் பழிச்சத்
தடம்பெறு வெளியுட் குடம்பை போல
நிலைபெறா வுடலர் தலை நிலத்துயி ரெல்லாந்
தந்தொழின் வகையின் முந்துடன் முதற்பெற்
றொழியாது கறங்கு மொருபடம் போறலி

னலம்பெற வேட்குநர் நலனே யுஞற்றுப
வதுதா, னிற்றென் றறிவுகொள லெண்ணமைய தன்றாற்
கண்ணொளி கஞலக் கதிர்க்கு மொளியிற்
குலநலம் வழாஅக் குறிதலை மிலைந்து
நன்மன ஞெகிழ்ந்து சொன்முறை தெருட்டி
யங்கையி னெல்லியி னங்கலத் தளித்த
நுகத்தலைப் பகலி னுந்தாச் செங்கோன்
மனுவழித் தோன்றல் கொடுவரி புனையத
ஞூஉஇய யாக்கை யொண்டவப் புலியனா
லறிவறிந் தான்ற விரணிய வருமன்
வைதிக சைவ முதுநிலை திறம்பா
நெறிகடைப பிடித்த வறிவு ளோரு
நினைந்த வாறே படிவம் புனைந்து
பிணங்கிய கொள்கைச் சமயக் கணக்கரு
முடற்பொறை வீந்து வுயிரிற வரினு
மழியா மான மதுபுரக் குநரும்
புலம்பட வுணரிற் பொருளிற் சிறந்த
நலம்படு பொருடா னவிறற் கில்லென்
றதுதொகப் பண்டமாற் றுதிசெய் குநருந்
தாளாண்மை யொன்றே தலைமைய தெனாஅ
வேளாண்மை யாற்று மேதக் கவரும்
புறக்குடி மூன்றும் பொருந்து மாற்றின்
வாழ்வுபெற வைத்த மறுகுபல போக்கி
யைம்பெருந் திணைபு ளரும்பொரு ளுறுது
நிரம்பி வழங்கு நியமமும் பிறவும்
வல்லாங் கெழிலின் வகைஇச் சொல்ல
வொன்றினொன் றொவ்வா வொண்கதிர்க் குருமணிக்
கூம்பொடு வெள்ளிக் குன்று குயின்றன்ன
மிகுநிலை மாளிகை யியற்றி யகவயிற்
பரிதிமுகந் தடவிய விடைக்கொடி பரித்த

புரிமுக மாயிடை மண்டபம் புனைதந்
தெம்மவ ராணவக் கறையிரு ளொதுக்கி
யுலவாப் பேரின்ப வீட்டு ளுறைவா
னருணெறி முறைசெய்து கொலுவீற் றிருப்பப்
பொன்வேய்ந் திட்ட நன்ன ரத் தாணி
யென்று முவந்த குன்றக் கிழவ
கடிநறை யசும்பிக் காவதங் கமழு
மலர்த்தவி சிருந்த மாமறைக் கிழவ
னிணைநீர் செருக்கி னெழுச்சி நோக்குபு
மறைமுதன் மனுவின் பொருட்டிறம் வினாஅய்
விடைநிறுத் தாதான் முழைஞ்சிலின் விடுத்துப்
படைப்புப் படைத்த கடவு ளேறே
யமரர்க் கருளிய குமர நாயக
வென்று மொருபடித் தாய்நிலை பெறுவதூஉ
மனைத்து மூடுருவி நின்றளந் தறிவதூஉ
மெழுவா யிறுவா யின்றின் பாவதூஉ
மெனுமுத் தகுதிப் பெற்றியை யேனுந்
தாமறி யளவையிற் றம்மகத் துன்னூஉப்
போற்றுநர்க் காங்கே பொருக்கென வெளிவந்
தவர்குறை முடிப்பா னவர்குறித் தாங்கு
நிகழுருக் கோடலு நிலைஇய பண்பே
யதனாற், பண்பு தொகுதலொடு வினைதொகு பான்மை
யாறு முகனுந் திருவரு டதும்பி
வழிய விழித்த பன்னிரு விழியு
மறவருள் குறிக்குந் திறநிலை யோவா
வைவேன் மறிந்த வரையகன் மார்பு
மையிருட் பிழம்பி னொய்யெனத் தோன்று
மிருகதி ரென்ன மயின்மிசைக் கிடந்த
திருவடி யிரண்டு மரிவைய ரிருந்த
விருமருங் குடனே யெமதுகண் காண

வுலகப் பொருளைப் புலனுறக் கண்டும்
போக்கற் றிருந்து நீக்கறத் தேர்ந்து
மின்னு நுகர்வி னிடர்மிக் கிரங்கி
நன்னர் நுகர்வி னசைமீக் கூர
வதுவது வாகிநின் றழுங்குநெஞ் சொருங்கி
யெற்றவ முள்ளக் கோயிலிற் சிற்றம்
பலமெனும் பதுமம் பில்குபே ரின்பத்
தேனுகர் வண்டிற் சிவணிக் குகனென
நிற்கண் டுறைப்ப நல்குமதி நிகரின்
றிழுமென வொழுகிய வமிழ்துறழ்
செந்தமிழ்ச் சங்கத்து முந்துபுல வோனே. (உஅ)

தோழிதேற்றல்.

புலந்தொகுத்தோர் போற்றுங் குமரேசன் பொன்மன்
றிலந்தொகுத்த வாழ்வுடைய வேந்த—லலந்தொகுப்பக்
காணு னருள்புரிவன் கண்டாய் கவலொழிதி
பூணு ரிழையாய் புலர்ந்து. (உக)

இயல்பினைத்தேன்றல்.

புலம்பெறுமாற்றினுழிதால்தீர்ந்ததுபோகட்டென்று
நலம்பெறுமாற்றிற்குறையிரந்துய்தனமதியல்பாம
அலம்பெறமவ்வவர்வேட்டனவேட்டாங்கருளுமியல்
பொலம்பெறுசிற்றம்பலத்திற்குமாரன்றன்பூங்கழற்கே. (௩௦)

உரிமையுரைகூறல்.

புரையாக்கிடந்தனவெல்லாந்தவிர்த்துப்பொதுவதனில்
விரையாக்கலிசெய்குமாரபெருமான்மிசையருளால்
உரையாகக்கிடந்தவிம்மும்மணிக்கோவையுவனடிக்கே
வரையாக்கவினெறுடையாயுரித்தாகுமிவ்வையகத்தே.

சிதம்பரம்

குமரவேள் மும்மணிக்கோவை.

முற்றிற்று.

ஓம்.

குமரவேள்

மும்மணிக் கோவை

அருங்குறிப்பு.

விநாயகர் துதி.

குலவல்-விளங்கல். குறிக்கொண்டு - உறுதியாகக்கொண்டு. ஈண்டுக் குறிக்கொள்வோர் அடியவர். நித்தன்-சிவபெருமான். பொலிதல்-தேவர் கயமுகாசுரனை வென்று விளங்கல். கற்பக மென்றதற் கேற்ப அன்பு நீராகவும் நெஞ்சம் புலமாகவும் உருவகிக்கப்பட்டன. பொற்புறுத்தல்-பொற்புறுவித்தல்.

நூல்—க.

கிளத்தல்-சொல்லுதல்.

க. தேமணம்-தெய்வமணம்.

௩. காண்தக-அழகுதக்கிருக்கும்படி.

௪. முற்பயன் பிழையாது அப்பயன் கொண்மார் - பழவினை தவிராது அதன் பிரயோசனத்தை நுகரும்படி.

௫. ஈரிருபிறப்பு-அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன.

௬. எழுதிறப்-எழுகூறுபாடு. அவை தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. அவற்றிடம்-அவற்றிற்கிடம்.

௧௨. தவலல்-கெடுதல்.

௧௩. இடன்வரைத்து உள்கி-இடத்தை அளவு படுத்திக் கருதி.

௧௭. மேனிலம்-சுவர்க்கம்.

௨0. ஆகன்மாற்றின்-ஆதலினாலே. எண்ணுவரம்பு - அளவையின் முடிபு.

௨௨. பிறவியென்றது மக்கட் பிறவியை.

௨௩. பேறு-பெறுதல்.

௨௪. நன்று-நன்மை.

௨௫. முளிபுல்-உலர்ந்தபுல்.

௩௨. படர் இவையோடு நிற்கு எவனோ தொடர்பு-துன்பத்திற்குக் காரணமாகிய இவற்றுடன் நினக்கு யாது சம்பந்தம்?

௩௪. ஏர்பு-எழி.

௪0. மறை - எதிர்மறை. எனவே பெருமை என்றபடி. "அண்டங்

க ளெல்லாமணுவாக வணுக்க ளெல்லா,மண்டங்களாகப் பெரி தாய்ச் சிறிதாயினன்" என்பது திருவிளையாடல் பாயிரம்.
சச. பேர்தருகுறி - பேராற் குறிக் கப்படும் உருவம்.
சஎ. கொடுவரி-வியாக்கிரபாதர்.
சஅ. அரவு-பதஞ்சலி.
ருO. படிவு-வடிவு.
ருக. அகம் எழனுருபு.
ருரு. வேணவா-மிக்க அவா. அறிவு வேணவா செயல் முறையே ஞானம், இச்சை, கிரியை
ருஎ. யாதும்-சிறிதும்.
சுக. நெஞ்சே! ருஉ. இறைவன் அடிக்கமலம் அகம் பூப்பப் ருஎ. புலனிலே நிறுத்துபு ருகூ அன் பின் வழாது சுக அமைவு கூ ர்ந்து சுஉ. இடரைத் துரப்பி சுரு உய்தி என்று சுச. அறை மொழியிறைய் ஓர்ந்து சுசு. பே று பெறலாற் களிமகிழ்.

உ.

ஏக்கறுதல் - ஆசையாற் றாழ்ந்து நிற்றல். தாக்கற்று - ஒருபற்று மில்லாது.

ரு.

கஞலல் - கலத்தல். எண்பெற்ற- தியானத்தாற்பெறுகின்ற. தன் னென்றது-வண்மணியை.உண் பெறல்-அநுபவமாதல்.

ச.

கையுறை - கையிலுறுவது. என் றது இங்கே மனமொழி மெய் களை. எல்-ஏற்றுக்கொள்க. கட் டுரை-பொருள் பொதிந்தவுரை.

க. மணி - மண்ணுதலாற் போந்த பெயராதலிற் காரணவிடுகுறி யாயிற்று. மண்ணுதல் - சாணை தீற்றுதல்.
உ. வரையாது-நீங்காது.
ரு. கைக்குரிய - வளப்பமாவது ஈ கையேயாம் என்னுமுறை.
எ. துள்ளி-விரித்தல் விகாரம்.
கO. ஈம்-ஈயும்.
கக. தலைவன் - வருணன். ஆசை- திக்கு.
கச. தலைவி தலைவனைப் பிரிந்து இரங்குதலினும் அவனோடுகூடு தலினும் கூட்ட நிகழாமையின் ஓராற்றினையெனப்பட்டது.
கரு. உட்புறம், புறப்புறம் என்பன வற்றுள் புறம் எழனுருபு. உள்- மனம். ஒட்பம்-ஞானம்.
கஎ. தன்னைச் சிவணுதலாவது யாறு,தன்னின் மூழ்கினோர்க்கு அகமாசு கழுவி ஞானத்தையும், உடன்மாசு கழுவிப் பிறவற்றை யும் பெறுமாறு கொடுத்தல் போல, மூழ்கியவருந் தம்மை யடைந்தார்க்கு அவ்வாறு கொ டுக்குந் தகுதியராகச் செய்தல்.
கக யாறு மருதத்தைவளமுறுவித் துத் தன்னோடு கலத்தலின் தானும் அம்மருதத்திற்கு உபக ரித்தல் வேண்டுமென்பது கரு தியோ?
உகு. விழை-உவம உருபு.
உஅ. சந்திரனிடத்தே மலர்ந்த நீலம்போல முகத்திலே மலர்ந்த கண்ணுடையராகிய, மேகத்தை நோக்கும் மயிலைப்போல விளை வை நோக்கும் உழத்தியர்.

௩௬. ௩௭. நாவாய் கால் என்பன சிலேடை.

௨௬. தோளார் ௨௭. முலையார் ௩௦. விழியார் ௩௨. மஞ்ஞையென ௩௩. விளைவு ௩௪. விழையும் உழத்தியர்சூழ் ௩௫. புலம்.

௨௨ தக்கார்க்கீகைதலைப்-பட்டிடின் ௨௩ பொருள்கள் எய்திடும் என்ற ௨௫. உரைத்திறனாலே ௩௬. நெறிநிரலை ௩௭. உண்டு ௩௮. செலீஇ நிறீஇ ௩௯. செழிக்குமென்கின்ற இதற்காகவோ?

௫. கன்மேந்திரியங்களி லொன்றாகியகையின்றொழில் தானமென்பதுபற்றி இங்ஙனங் கூறப்பட்டது.

௨௨. தக்கார்க்கீயின் ஒன்று பலவாய்ப பெருகி வருமென்பது "உறக்குந் துணையதோராலம்வித் தீண்டி, இறப்ப நிழற்பயந் தா அங் - கறப்பயனுந், தான் சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறி தாப போர்த்து விடும்." என்றதினறிக. நாலடி. அறன்வலி யுறுத்தல்.

௪௫. கணித்தல் செல்லா உரு-மனத்தினாலும் இவ்வளவென்று அளக்கமுடியாத உருவம்.

௪௮. நோதகவு-துன்பம்.

௪௯. விரும்பின தரூஉம் இயவுள் பெரும்பெயர் தரூஉம் இயவுளென் இயையும். விரும்பின-இம்மையின்பங்கள். பெரும்பெயர்-பெரும்பொருள். அது வீடு.

௫௫ உயரி - உயர்ந்து.

௫௯. உடம்பிடி-வேல்.

௬௧. மல்கியன்றிச்செல்கலா வினை-அனுபவமாயினன்றி நீங்காத ஊழ். "ஒழிகென வொழியா தூட்டும் வல்வினை" என்பது சிலப்பதிகாரம் நாடுகாண் காதை.

௬௨. அல்லாந்து-வருந்தி.

௬௪ "பொன்னார் திருவடிக் கொன் றுண்டுவிண்ணப்பம்" தேவாரம். திருநாவுக்கரசு சுவாமிகள். திருத்துங்கானைமாடத் திருவிருத்தம்.

௭௦. மன்னிய-நன்னும்பொருட்டு.

௫.

காபாலர் மாபாலர் பூபாலரெனக்கூட்டி இந்திரன், விண்டு, பிரமனெனக் கொள்க. ஆம்-உரிமை, இன்புறுதற் கேதுவாகிய உரிமைப பொருள்கள். தில்வவனம் - தில்லைவனமாகிய சிதம்பரம்.

௬

குறை - இன்றியமையாப் பொருள். அது 'வினைக்கண்வினை கெட லோம்பல் வினைக்குறை, தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு" என்பதனானுணர்க. திருக்குறள். ஆள்வினையுடைமை.

ஏனைப்பொருள் மண், பொன். சவி-ஒளி.

௭.

ஓம்படை-காவல்.

௧. பலமுகமாக எனமாறுக.

௨. உலபபில்காலம் - முடிவில்லாத காலம்.

௪. குரவனின்-குரவனைப்போல.

௫. இருவேறியற்கை-திருவுடையராதலும் தெளிவுடையராதலும்.

எ. தற்பயன் - இச்சரீரம் பெற்றமையின் பிரயோசனம்.

அ. அரிதின் உய்க்கும் வைகல்-அரிய காரியங்களில் உபயோகிக்குங் காலம்.

கஉ. பிரணவத்தை முன்னே உடைய மொழியென விரியும். பிரணவ விளியுமாம்.

கரு. ஒலி, பெரிதாய்த் தோன்றி வரவரத் தேய்ந் தொழிதலான் மடவோர்செய்திக்கும், தோன்றும்போதே நாற்றிசையும் ஒருங்கே பரவுதலான் அக்கினிச் சுடருக்கும் உவமையாயிற்று.

கஅ. தோற்றரவு-தோன்றுதல்.

உக. பதநிலை கலைக்கெலாம் முதனிலை - பதத் தொகுதியாகிய நூல்கட்கெல்லாம் முன்னேநிற்பது. (முதனூல்)

உஉ. வரையாமறை - எழுதாமறை. சுருதி என்றபடி.

உச. துறைவிழுமேவ - நன்னெறியிலே அறிவுசெல்லுதலால்.

உரு. அது என்றது தொழிலை.

உசு. தவிர்வது-விலக்கு.

உஎ. செய்வது - விதி. பயன்-நுகர்ச்சி.

உஅ. எச்சமின்று-குறைவில்லாமல்.

ஙo. இச்சை ஞானத்துளடங்கும், அறிவவளர்ச்சிதலின்.

ஙஉ. பொதுவறிவு இஃதொன்று தோன்றுகின்றதென்பது. ஐயம் அதுவோ இதுவோ என்பது. திரிபு ஒன்றை மற்றொன்றாய்த் துணிவது. உணர்வாவது பெயர் சாதிமுதலியவற்றால் சவிகற்பஞ்செய்து புலப்பட அறிவது. மா ஒன்றன்பெயர், மாத்தன்மை சாதி, அதன்வண்ணம், வடிவம் முதலியன குணம், நிற்றல், தளிர்த்தல், பூத்தல் முதலியன கன்மம், மாவென நிலைபெறுதல் பொருளாகை. இதுவே சவிகற்பவுணர்வு.

ஙஎ. கண்கூடு-பிரத்தியக்ஷம்.

சஉ. வரைகுநை - கொள்ளுகின்றனை.

சங. முதுக்குறைவு-பேரறிவு.

சஅ. அருங்குரைத்து-அரிது.

அ. அரிதின் உய்க்கும்வைகலை க. வறிதுபோக்குற்று கo. உழிதருவேமும் கக. அறிவுகொளல்வேண்டி கஉ. எஞஅ கரு. எஞஅ உo. எஞஅ உக எஞஅ உஉ. மன்னும் உரு மறையை க. ஒருங்கி உ. தூக்கி ச. செய் குரவனின் உரு. அருளினை.

உக-சகு. பொதுவறிவும் ஐயமுந் திரிபும் உணர்வும் முதுக்குறைவும் ஆகிய இவற்றை முந்துறுக்கும் ஞானகாண்டம்.

ருo. மறையள் பிரணவத்தொடு புணர்த்து முருகக்கடவுள் நாமம் மும்முறை கூறியிருப்பதை "வேதம் ....முக் கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணியனோ மெனவே முக்காற்கூறும்" என்பதினறிக. காஞ்சிப் புராணம் குமாரகோட்டப்படலம். கசு.

ருச. அறக்கழிவு-பாவம்.

ருரு. கிம்பிரி-பொறுமை.

ருஎ. விழுக்காடு-குறைவு.

சுஅ. பேறு-பெறுவது. அது முல்லையென்னும்பெயர். முல்லை-கற்பு. முல்லை மகளிர் சிரித்தலால் ம

லர்வதாகலின் இவ்வாறு கூறப்பட்டது.

எக. ஆய்ச்சியர்நக, ௬௬. கற்புப்பிறழாது ௬எ. கைபோதந்த ௬அ. பேறு யாண்டும் ௬௯. பிரியாது உடன் வாழ் வாழ்வின் நின்றேமை எ0.நகுதல் மீக்கோள் இலை எக. என்று எதிர்நக்க எ௩.தளவு.

எ௩. தளவு-முல்லை.

எ௪. பொருள்புகன்றென மாறுக.

எ௬. வாயில் - இந்திரியம்.

எஎ. புலம்புரிபயன்-அறிவாலடையத்தக்கபயன்.

அ0. மடை-நீர்கொள்ளுமிடம்.

அ௪. அணிந்த-அலங்கரித்த.

அ௬. அகவல்-ஆடல்.

அஎ. உணங்கும்-உலரும். உமட்டியர் - நெய்தற்பெண்கள்.

அ௯. பாக்கம்-நெய்தனிலத்தூர்

௯௫. ஒழுக்கிய-ஒழுங்குபடுத்திய.

அ௬. புன்னை இருந்து அஎ. ஒப்பிய உமட்டியர் அஅ. குரவை அயரும் அ௯. பாக்கத்து உமணர் ௯0. புனலுலகுந் திரிதந்து ௯உ. பிறங்குவேழுக்கு ௯௫. வரை வளம் படுக்குநர் எ௩. முல்லைவளம் படுக்குநர் அக. பணை வளம்படுக்குநர் அஉ. எல்லாமியங்கல் அ௩. மண்ணுலகன்றி ஒன்றுமின்று ஆயின் ௯௩. எதிராவரோ? என்று இயம்பி ௯௪. உலாய ௯௫. கழியென்க.

௪.

மகள் - பெண். முறைப்பெயரன்று. நிறை-கற்பு. பறை-ஒலி. குமரவேளே! தழா தொழியின்னதருள் எவ்விடத்தது?

௯0.

க. தலைநாள் - அநாதிகாலம்.

உ. கப்புதல்-மூடுதல்.

௩. ஐயவி-வெண்கடுகு.

௪. உறுகல்-பெருங்கல்.

௫. கையறவு - செயலறுதற் றுன்பம்.

எ. எமியேம்-யாங்கள்.

அ. ஈங்குத்துய்ப்பன-திருஷ்டகன்மங்கள்.

௯. ஆங்குத்துய்ப்பன - அதிருஷ்டகன்மங்கள்.

௧0. இருவயிற்றுய்ப்பன - திருஷ்டாதிருஷ்டகன்மங்கள்.

க௩. வீடு-விடுதலை.

க௬. எழுநாவன்னி-காளி, கராளி, மனோசவை,சுலோகிதை, சுதூமபாவருணை, புலிங்கினி, விசுவருபை என்னும் எழு நாக்குக்களையுடைய அக்கினி. இவற்றின்பெயர் இரணியை முதலாகவும் கூறுவர்.

உ௩. கருவி-கரணம்.

உ௬. உய்த்துணர்காட்சி - பகுத்தறிவு.

உ௯. இடையறவுபோக - நடுவிலற்றுப்போகாமல் (இடைவிடாது.)

௩க. ஆதியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்.

௩உ. நடவுதல்-செலுத்துதல்.

௩௩. எண்ணமின்றி முறுகிய புண்ணியம்-அபுத்திபூர்வ நல்வினை.

௩௫. அடிப்பட-ஆதாரமாக.

௩௬. இன்னுங்கு-துன்பம்.

௩எ. 'தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி' திருவாசகம். போற்றித்திருவகவல். ௪உ.

௪எ. மயர்வு-மயக்கம்.

சஅ. பிறக்கிட்டு - முதுகிட்டு.

எ. எமியேம் உ. இருளில் ரு. நோத ல் சா. தவிர்ப்பான் கக. ஆசா மியமும் கங. அமர் சஞ்சிதவீடு கூடி கரு. வாழ்வின் உறைதரு மாறு கஅ. சத்திதுணையாக ககூ. மாயையின் வினை துய்ப்பான் உச. போகமும் பிறவும்உரு. தந் ததூஉமன்றி உசா. உய்த்துணர் காட்சி (தந்து) உஅ. உதவி உகூ. புரிந்து ங௦ வினை ஙக. முந் நெறியான் விடுத்து ஙஉ. நடவு நாண்முறையில் ஙச. புண்ணி யம் ஙரு. நோ ஙசா. இன்னுங் கு ஒழிய ஙஅ. செய்து ச௦ மகி ழ் ஆர்வத்து சங. சரித்து சச. கைவந்திடுநாள் சரு. அணுகுபு ரு௦. அருள்புரிதி எனக.

சாரு. பற்றுது-நிலைத்திராமல்.

சாசா. அவாக்கு-அவாவுக்கு.

சாஎ. 'எய்யாமை-அறியாமை.'

எஉ ஆறுமை-நீங்காமை.

அச ஈட்டியதற்சாந்தம்-தேடும் இய ற்கையுடைய அமைதி.

அரு. உரக்கோல்-வலிய அம்பு.

அசா. இறவுளர்-வேடர்.

கூஉ. மையாந்திட-மயங்க.

கூங. கவின்று-அழகைக்கொண்டு.

எஅ - கூ௦. கொடிகள் மரம்; சுனை அருவி; கம்பியன் எழுதிய தாளம் அருவி மருங்கிற்கிடந்த மணிகள்; காவலர் இறவுளர் இவை முதலியவற்றால் மாடங் கள் மலைகளை நிகர்த்தன.

எசா. செம்மால் கூச. நகரோய் கூசா. அண்ணல்மணியே கூஎ. தலைவ! எசா. ஆவதூஉம் கூஅ. உணர்குதி.

கக.

இடுகும் - ஒசிகின்ற. வடுகிடந்த கண்-வடுகிடந்தாலதனையொத் த கண். ஆம்-ஜலம். எழிலிவரவு தலைமகன் வரவைக் குறித்த லின் கிடைநிலையிற் போமுன் தோழி அதனைக் கூறினாள்.

கஉ.

அந்தமாமது - அந்த அனுபவமா கியதேன். மந்தமின்றி - சோர் வின்றி.

கங

உ ஆவயின்-அவ்விடத்து.

அ. உரைமனமிறந்தஉறுபொருள்-வாக்கு மனதீதமாகிய பரம்பொ ருள்.

கக. அறிநிலை-பாசவறிவு,பசுவறிவு களாலறியுந்தன்மை.

கங. யவனர்-சித்திரக்காரர்.

கசா. ஞானியர்.

கஎ-உக. இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முறையே காண்க.

உரு. யோகியர்.

ஙஉ. கிரியையர்.

ஙங. புறத்தொழில்-நன்னெறிக்குப் புறம்பான பாவத்தொழில்.

ஙசா. சரியையர்.

ஙஅ. கோல்-தராசுக்கோல்

ஙகூ. 'கந்தழியாவது ஒரு பற்று மற்று அருவாய்த் தானேநிற் குந்தத்துவங் கடந்த பொருள்'

சக. நடலை-பொய்.

சஉ. முடலை-முறுக்கு, வளைவு.

சஎ. நொதுமலர்-அயலோர்.

ருச. எக்கழுத்தம்-தலையெடுப்பு.

௬௦. ஐயரும் பாசம்-ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி.

௬௫. கொண்டி-கொள்ளை. குவலயக்கு-பூமிக்கு.

௮-௬௭. ௮. உறுபொருள் தானும் ௯. பரந்தும் முனைபபுழி௧௦. ஒருவலின் ௧௧. புறம்படுத்துச் ௧௨. சிறந்து ௧௬. துய்த்து இருக்குநர் ௧௭. ஒருங்க ௧௮. பயின்று ௧௯. மடங்க ௨௦. நேசித்துச் ௨௧. சமாதியின் ௨௪. ஏகமாகிப ௨௫. பிறங்குநர் ௩௨, பொலிகுநர் ௩௬. குலவுநர் (இவர்க்கு) ௩௭. வினை ௩௮. கோல்போறலின் ௩௯. கந்தழியெய்துவர் ௫௪. எனைஅ.........௫௫. தேறுகிற்றிலம்.

௬௫. குவலயக்குக்கொண்டி என்று ௬௬. வாழ்வு அளித்த ௬௭. வள்ளால்.

௭௧. கிடை-வேதத்தை ஒரு சேரச் சொல்லுவித்தல்.

௭௪. புலன் உழுது உண்மார்-அறிவால் உழுது பயன்கொள்வோர்.

௭௮. உள்ளறைபோதல் - மனநிலை தளர்தல்.

௮௧. முள்ளரைக்கொடி - தாமரைக் கொடி.

௮௫ பழுநிய-முதிர்ந்த.

௯௦. உயவுஇலாதமயல் - நினைவை இல்லாததாகச் செய்கின்ற மயக்கம் : உயவு-நினைவு.

௯௧. குருகு பெயரியவரை-கிரவுஞ்ச மலை.

௯௨. அறிவு பெயரிய வேல்-ஞானவேல்.

௭௯. ஆடவர் ௮௦. தம்வழிப்படூஉம் வாரம் இரப்ப ௭௭. மங்கையர், ௮௩. மார்பின் ௮௪. ஓச்சிய அடிச்சிலம்பு

௯௫ நன்று-பெரிது.

௭௦. அதனால் ௯௫. நின் திருவடியன்றிப் பெரிய பொருள் மற்றிலை.

௧௫.

மொழி "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்பது முதலியன. தட்குதல்-தடைசெய்தல். மொழியைவினை தட்குதல் என்னமுறைமை ?

௧௬.

௩. அற்றம் - சோர்வு.

௪. இனமாவது ஈண்டு மக்கள் யாக்கை.

௮. உடுத்து-உடுத்த.

௧௨. கலாய்த்து-வேறுபட்டு.

௧௮. புடைபெயர் வாயில்-கன்மேந்திரியம்.

௨௬. ஐவகைத்துயர் கருப்பாசயப்பை உறுத்துதல், அதிற் சலம் பூரித்தல், உதராக்கினியால் எரிப்புண்ணல், பிரசூதவாயு முரித்துத் தள்ளுதல், யோனித்துவாரத்தால் நெருக்குண்ணல் என்பன.

௨௭. பிறங்கை-பிறப்பு.

௩௦. அமலல்-தங்குதல்.

௪௨. இடையகம்-உள்ளிடம்.

௪௩. ஆய்தக்குறி-ஆய்தவெழுத்து.

௪௪. குழிசி-பானை. முரவை-தவிடு.

௪௭. சொன்றி-சோறு.

௪௯. குய்-தாளிப்பு. கருனை-கூட்டு.

௫௨. சுமடு-சும்மாடு.

௫௯. கமநிறைந்து - மிகநிறைந்து.

௬௦ ஐவகை யமளி-பஞ்சசயனம். "சிறுபூளை செம்பஞ்சு வெண்

பஞ்ச சேனை - முறுதுவி சேக்கையோ ரைத்து."
கஎ. நுழை-நுட்பம்.
எ௯. நுழைந்த-நுழாவிய.
எக. கிடைத்து-அணுகி.
அ0. கலம்-மரக்கலம
அக. பண்டமாற்று-பரிவர்த்தனம்.
அஉ. கவர்க்கும்-பிளவுபட்ட. இவநல்-உவோபம்.
௯௯. உறவர்-மேலோர்.
க0க. அறதி-பாசம்.கொடை-கொடுக்கும்பொருள்.
க0௬. உருத்து-கோபித்து.
கக௩. மயற்கை-மயலின்சிறுமை.
க௩0. சிகரி-கோபுரம்.
ககசு. குயின் அமர ககஎ. விண்ணிடத்துத் தாய் கக௯. புங்கவரும் கஉ௩ நீர்வரைப்பில் இறங்கி கஉசு. அருளாளன் குறிகண்டு கஉ௬.குறைமுடித்துச் க௩0.செவ்மார் இலங்கிய சிகரியென்க.

கஎ.

மாழாமல் - மயங்காமல். புலிவாழ்கடறு - வியாக்கிரபாதர் வசித்த தில்லைவனம்.

கஅ.

பேரின்பருளுதல்-ஈண்டுப் பிரணவோபதேசஞ்செய்தல்.

க௯.

க முழுநெறி-பெரியநெறி.
உ. அறவர்ப்புரைதல் புறநலம் பூத்தற்கேகொள்க.
௫. பற்று-பற்றமுடியாத.
க௩. உடம்பாட்டிலிருந்தன எதிர்மறையாகவும் எதிர்மறையி லிருந்தன உடம்பாடாகவும் மாற்றி என்றபடி.

க௮. இறும்பூது-வியப்பு.
உ0. பாற்றும்-துரத்தும்.
உச. அஞ்சுதக்கன-அஞ்சத்தக்கன, பாவங்கள்.
கஎ-உசு. கசு. திருமால் ௩. புறநலம் பூப்பப் ச. படிவுகொடு கசு. திரிப்ப கஎ. மனவலி பிறழ்ந்து உ0. தெய்வத மிவர் கொலென்று உக. குறிசெய்து உ௩ மாதமர் படிவங் கருத்துட்படாது உச. படர் விளைத்த உ௫. பதகர்.
௩0. பதம்-சோறு.
௩உ. செம்பொருள்-பரம்பொருள்.
௩௩. ' தன்னை.........ஆயினேன்' திருமுருகாற்றுப்படை, ஆசிரியர் நச்சினார்க்கினியருரை மேற்கோள்.
உஅ. பெருமான் ௩எ. செம்மல் ௩அ. விழிப்பொறி, சஉ, நோய் தவிர்பாக்கு அருளுருக்கொண்டதலைவன்.
சச. மள்ளர்-மருதநிலமாக்கள்.
சஅ. மிளை-காவல்.
௫0. விறந்து-செறிந்து.
௫உ. ஒருநெறி-ஒழுங்கு.
௫ச. ஊழ்-வரிசை.
௫அ. கூம்பு-சிகரம்.
௫க-௬உ. பயிர், மரகதப் பந்தர்; பொற்றாமரை, பொற்சிகரம்; செந்தாமரை, விளக்கம்; வாளையலவன் செல்வமென்க.
௬௬-எக. அறம், பொருளின்பங்களையும்; பொருள், இன்பத்தையும்; இன்பந, தன்னையுமே தருதலின இவ்வாறுகூறப்பட்டது.
எஉ. காட்டம்-விறகு.
எ௩. உண்ணிலையாகி - அந்தர்யாமியாகி.

அக. காண்வர-காண.

உக.

ஒருவர் ஒருவர்க்குக் கண்போ ன்றவரெனப்படின் அவர்க்கு அமையம் நேர்ந்தபோது உதவி புரியத்தக்கவராதல் வேண்டு மன்றே? நீவிர் கண்போன்றவ ரெனப்பட்டும் எனது துயரம் குமாரற்குக் கூறிலிர் இஃதோ நுமக்குப் பெருமை என்று ஏளனக.

உஉ.

க. பீடு - பெருமை. அலமந்து-சுழ ன்று.
உ. அஃகுதல்-சுருங்குதல்.
ச. குறை பெய்தல்-குறையை நீக் குதல்.
ரு. இங்கிதம்-குறிப்பு.
கo. மறுவல்-மறுபடி.
கரு. பெருநீரானர் சிலேடை.
கரு. கொன்னே-வீணுக.
உo. முடிக்கஅரும்-முடித்தற்கரிய.
உக. கதிப்ப-சிறப்ப.
ஙக. கண் இலாது- தாக்ஷணியமில் லாமல்.
ஙஉ. மறுக்கம்-மயக்கம்.
ஙசு. பாடுகிடத்தல்-வரங்கிடத்தல்.
சஎ. சலநிதி, அம்புராசி, ஆர்கலி என்பனசிலேடை.
ருரு. அல்லுழி-அல்லாதவிடத்து.
எக. உராய்-உலாவி.
சுக. நாவாய் சுரு. பெருநீர் எஅ. பரவை சிலேடை.
உக. இவள் இஞ்ஞான்று ஙo. குரு பாற் குறித்து ஙச. வேண்டுநர் ஙசு. பாடுகிடந்த பொன்மன்று ஙஎ. எந்தாய் ஙக. குரிசில் சo. உயிரே எளியோய் சக என்று சஉ. கலுழ்ந்தனளாகிப் சங. பே தையாயினளை சச. பேற்றை சரு. விளக்கை சசு. அமிழ்தைத் சக. துயருறத்தி ருo. ஆர்கலி செய்குதி.

உங.

உறவு-அன்பு. பிறவாற்றிலவாம்-பிறநெறிகளிற் செல்லுதலில் லாத. திருவினர்க்கு இல்லை உடையார்க்கருளும். என்க.

உச.

நீடல்-காலநீட்டித்தல். படர்-துன்பம். நின்பெயர் அம்சமென் பது. யோகியர், ஹம்ஸ. ஸோ ஹம். எனப்பாவனை செய்து பயன் பெறுவரென்பது யோக நூன்முடிபு. காதலர் - ஈண்டு யோகவேட்கையுடையவர். தந் தந்து-காலம் வாய்ப்ப. அம்சமெ ன்னும் பெயரே பயன் பெறு தற்கேதுவாயின், அதன் பொரு ளாகிய நீபயன் பெறுதற்கேது வாகாதிருபபது முறையன்றெ ன்பது கருத்து.

உரு.

க. வறன்-வறுமை.
உ. ஆறு-வேதாங்கங்கள்
ங மூன்றுபகல்-காலை யுச்சிமாலை. ஆறுதொழிலாளர் தருப்பண நீர் விடுத்தாற்போல, மங்குல் காலம் பொய்க்காது உறைபி லிற்றுங்கோடு.
அ. உறை-துளி.
கக. வெளில்-கட்டுத்தறி.
கஉ. காழ்-வயிரம்.

கரு. ஐவனங்குறுவ-மலைநெல்லைக் குற்ற.

கஅ. எழிலைம்பாலை - யானை மதம் போல் நாறுமொருமரம்.

கக. புய்க்கல்லா-பிடுங்கமுடியாத.

உரு. அட்டி-சொரிந்து.

உக. பக்கத்து முடிப்பது கொண்டை; பின்னேசெருகுவதுசுருள்; சுருட்டிமுடிப்பது குழல்; பின்னிமுடிப்பது பனிச்சை ; உச்சியின் முடிப்பது முடி.

ஙச. மதுகை-வெற்றிப்பாடு.

ஙரு. தாமரை காமத்தை நினைப்பூட்டுவது.

ஙஅ. நீலம் கொல்லுவது. இவை மதனம்புகள்.

ச0. ஆடவர் சிலேடை.

சரு. என்னவும்-எவ்வளவும்.

ருக. போக்கு-குற்றம்.

ருஉ. ஆசறுகாட்சி - குற்றமற்ற அறிவு. அது நிருவிகற்ப ஞானம்.

ருரு. கொங்குரை-மாற்றுயர்ந்த பொன்.

ருஅ. புற்கெனல்-பொலிவிழத்தல்.

சு0. கதழிய-வேகங்கொண்ட.

சுஅ. செழுவிய-செழிய.

எக. புகலா இன்பு - உரையளவிலடங்காத வின்பம்.

எரு. இம்மியும்-மத்தங்காய்ப் புல்லரிசி யளவும்.

எஎ. புலம்பு-வருத்தம்.

அ0. சாம்பிய-வாடிய.

அஅ. பனுவல்-திருமுருகாற்றுப்படை.

சரு. முலையினள் ஆதலை (இளமையினை யுடையாளென்பது கருத்து) என்னவுங் கருதாது சஎ. உட்புகுதந்தகள்வ! சஅ. கவினுள் சகூ. ஆர்த்தனூன்று தொட்டு ரு0. இன்பங்கிடைப்பான் ருஉ. ஐயர் போன்று ருச. நிறுத்துத் ருரு. தகவு பிறிதாகிப் ருஅ. புற்கென்று ருகூ. பீர்பூப்ப. சுஉ. நாசி காற்று நல்க சுங. உண்கண் சுச. நீர்த்துளி சுரு. சிதறக் சுஅ. கொடி சுகூ. சாய்ந்தெனக் எ0. கிடந்து எரு. நாணம்பூணுது எசு அரற்றிய எஎ. புலம்பு கூர்ந்த பாவை.

உஎ.

இகப்பற-நீக்கமில்லாது. அருண்மோ-அருளுமோ ? வனை-அழகு.

உஅ.

க. சார்வு-வாழிடம்.

உ. பிறண்டின்றென்று - பிறவிடத்திலில்லை யென்று. இறல் மதியையும் தண்டலை வானத்தையுங்காட்ட

கஉ. குரா-பாவைபோற்பூக்குமோர் மரம்.

கரு. விழைதக-விரும்ப

ஙஎ. பொலிமே-பொலியுமே.

ஙஅ. கூலம்-பலபண்டம்.

சக. புளினம்-மண்மேடு.

சஎ. சண்ணித்த-பூசிய.

ரு0. "நிலையிற்றிரியாது"...குறள்.

ருரு. இருமை இன்பு-இம்மை மறுமை யின்பங்கள்.

ருஎ. பிரமா முதலானவர் வேள்விக்குரிய முக்கிய அங்கத்தினர்.

ருஅ. வேறுவேறுருவிற் கூறுபடு குண்டம்-வெவ்வேறு வடிவமாக அமைக்கப்படுங் குண்டம். அவை நாற்சதுரமுதலியன.

௬௪. தன்வினை பிறவினை - யாகுஞ் செய்தல் செய்வித்தல்.

௬௬. ஒல்லா-முடியாத.

எ௫. உயிர்வருக்கம் படம் போறலின் என. அறிவு கொளல் எண்மையதன்று. எண்மை-எளிமை. ஆதலாலென்பது ஆலெனக்குறைந்து நின்றது.

எ௮. கண்ணுக்கு ஒளியைக்கொடுத்துப் பொருளைக்காட்டுஞ் சூரியனைப்போல.

௮0. ௮௧. மனுஸ்மிருதி.

௮௨. பகல்-நடு. நுந்தா-தள்ளாத.

௮௪. உடீஇப-உடுத்த.

௮௫. அறிவறிதல் - பரம்பொருளை அறிதல். 'அறிவையறிவது பொருளென வருளிய பெருமாளே' என்பது திருப்புகழ்.

௯எ புறக்குடிமூன்று-அநுலோமர், பிரதிலோமர், சங்கரசாதியார்.

௯௯. திணை-நிலம்.

௧00. நியமம்-கடைவீதி.

௧0௧. வல்லாங்கு-இயன்றவாறு.

௧0௨. ஒவ்வாமை - நிறத்தால் ஒன்றோடொன்று பொருந்தாமை. குரு-நிறம்.

௧0௬. புரிமுகம்-கோபுரம்.

௧௧0. அத்தாணி-அரசிருக்கைமண்டபம்.

௧௧௫ மறைமுதன்மனு-பிரணவம்.

௧௧௬. விடைநிறுத்தாதால் - விடைகூறாமையால். முழைஞ்சு-குகை.

௧௧௯. சத்து.

௧௨0. சித்து.

௧௨௧. ஆனந்தம். சச்சிதானந்த வடிவமுடையையாயினை.

௧௨௬. தாமறியளவை - தாமறிந்தபடி. பொருக்கெனல்-விரைவுக்குறிப்பு.

௧௨எ. பண்பு தொகுவது ஆறுகிய முகம். வினைதொகுவது ஆறிய முகம்ஆம். எனவே சாந்தமாகிய ஆறுமுகங்களோ டென்பது கருத்து.

௧௩௧. மறிதல்-குறுக்கிடுதல்.ஓய்யெனல்-விரைவுக்குறிப்பு.

௧௩௬. போக்கு-இந்திரியங்கள் பிறவிஷயங்களின்மேற் செல்லல்.

௧௩௬. பொருள்களைக் கண்டுந்தேர்ந்துமென்க.

௧௩௮. இடரின் இரங்கி ௧௩௯. நண்ணரின்நசைகூர ௧௪0. அழுங்கும்நெஞ்சு.

எ௩. உயிர் உடன்முதற் பெற்றுப் படம் போறலின் எ௬. நலம் வேட்குநர் நலம் உஞற்றுப என. அது அறிவுகொளல் எண்மையதன்று அதனால் ௮0. சொன்முறை தெருட்டி அளித்த ௮௩. மனு.

௮௫. இரணியவருமன், ௩எ. ஒருபால் பொழில்வளம் பொலியும் ௫௧. ஒருபால் தாழைதெரிக்கும் ௫௨. புறங்கிடந்த உள்ளகத்து ௯௮. மறுகுபலபோக்கி ௧0௧. வகைஇ ௧0௪. இயற்றி ௧0௬. புனைதந்துக௧0. பொன் வேய்ந்திட்ட அத்தாணி ௭0. பேற்றினர் எக. பழிச்ச ௧௧௧. உவந்திழவ ௧௧எ. கடவுளேறே ௧௧௮. குமரநாயக ௧௪௬. புலவோனே ௧௨௨. சச்சிதானந்தப் பெற்றியையேனும் ௧௨௪. போற்றுநர்க்கு ௧௨௫. அவர்குறித்தாங்கு

கஉக. உருக்கோடலும் நிலைஇய பண்பு. கஉங. அதனால் பன்னிருவிழி முதலியன கஙரு. எமது கண்காணவும் கசக. உள்ளக் கோயிலில் கசரு. வண்டிற் சிவணிக்குகென கசச. நிற கண்மறைப்பவும் நல்குமதி.

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன், றென்கடம்பைத் திருக்கரக்கோயிலான், றன்கடனடியேனையுந்தாங்குத, லென்கடன் பணி செய்துகிடப்பதே" என்பது தேவாரம். திருநாவுக்கரசு சுவாமிகள். திருக்கடம்பூர்க் குறுந் தொகை.

உசூ.

தொகுத்தல்- சண்டுவசப்படுத்தல்.
இலம்-இல்லம், வீடு. அலட-துன்பம்.

புரையாக் கிடந்தன - குற்றமுடையனவையாகக்கிடந்தன.
விரையாக்கலி-ஆக்ஞை.

௩௰.

அதுபோகட்டு - அவ் வழிதாலைப் போகவிட்டு. அலடீ-அமைதி.

உரையாக்கிடந்த-உரைத்த. வையகத்து அவனருளால் உரைத்த கோவை அவனடிக்கே உரித்தாகும்.

குமரவேள் மும்மணிக்கோவை அருங்குறிப்பு

முற்றிற்று.

இந்நூல் பின்னர் உரையோடு வெளிவரும் இயல்பிற்றாயிருத்தலின் இப்போது மிகச் சுருக்கமாக அருங்குறிப்பு எழுதப்பெற்றது.

ஓம்நமஃ குமாராய.

குமரவேள் திருவடிவாழ்க.

Madras : G. C. Loganadham Bros., The Guardian Press

பரிசோதன பத்திரம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
IX	20	பரம்மொருளை	பரம்பொருளை
2	5	வரைத்து	வரைந்து
2	26	ஏர்பு	ஏறபு
20	28	முயலவிற்	முயல்விற்
25	10	நீறீஇ	நிறீஇ
31	19	வெந்தீ	வெந்தீப்
2	17	அகம்	உனதகம்
8	36	கூறப்பட்டது	கூறப்பட்டன.